ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 471) Jul (1) / 2026

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)...32

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 436)

திருவாய்மொழி ஏழாம் பத்து மூன்றாம் திருவாய்மொழி
வெள்ளைச் சுரிசங்கு
ப்ரவேசம்

வ்யாக்யானம் - கீழ், "இட்டகாலிட்டகை" என்றபடியே இவள் மோஹித்துக் கிடக்சு, இவளுக்கு முன்னே தோழிமாரும் தரைப்பட திருத்தாயாரொருத்தியும் இவள் தசையை அநுஸந்தித்து அருகேயிருந்து கூப்பிட்டுப் போருமது தவிர்ந்து இப்பெண் பிள்ளை தானேயெழுந்திருந்து கால்நடை தந்து போமவளாய் விழுந்தது. அதுக்கடி, "பற்றிலார் பற்ற நின்றானே" என்று பெரியபெருமாளுடைய அசரண்ய சரண்யத்வந் தொடக்கமான இவளுக்குப் பற்றாசான குணங்களையும் ஸௌந்தர்யாதி விக்ரஹ குணங்ளையும் இவள்தான் வாய் வெருவியும் திருத்தாயார் சொல்லவும் கேட்டு அத்தாலே தரித்தாள். போன உயிரை மீட்கவற்றாயிறே குண ஸ்வபாவமிருப்பது.

விளக்கம் – கடந்த திருவாய்மொழியில் இந்தப் பராங்குச நாயகியானவள், "இட்ட கால் இட்ட கை" என்று மோகம் அடைந்து கிடந்தாள். இவளுக்கு முன்னரே இவளுடைய தோழிமார்களும் விழுந்து கிடக்க, இவளுடைய திருத்தாயார் மட்டுமே இவளுடைய நிலையை நினைத்து, இவள் அருகே இருந்தபடி அழைத்தாள்; அது மட்டும் அல்லாமல், இந்தப் பெண்பிள்ளை தானாகவே எழுந்திருந்து கால்களால் மெல்ல நடந்து செல்ல முயன்றபோது கீழே விழுந்தாள். ஆனால் மயக்கம் அடைந்து கிடந்தவர்களுக்கு தெளிவு ஏற்பட்ட காரணம் என்ன என்பதைக் கூறுகிறார்; "பற்றிலார் பற்ற நின்றானே" என்று

பெரியபெருமாளுடைய, "சரணம் புகாதவர்களுக்கும் சரணம் புகும் இடமாக உள்ள தன்மை" தொடக்கமாக, இவளுக்குக் கொள்கொம்பாக உள்ள பல திருக்கல்யாண குணங்களையும், ஸௌந்தர்யம் போன்ற திருமேனி குணங்களையும் இவள் வாய்விட்டுப் புலம்பி, அது மட்டும் அல்லாமல் திருத்தாயார் சொற்களைக் கேட்டும் தரித்தாள். ஆனால் இவ்விதம் குணங்கள் உயிர் பிழைக்கும்படிச் செய்யுமோ என்பதற்கு விடை தருகிறார்; போன உயிரை மீட்கும்படியாக அல்லவோ குணங்கள் இயல்பு கொண்டவையாக உள்ளன!

வ்யாக்யானம் - கீழ்ப்பிறந்த மோஹமும் தெளிந்து, விச்லேஷ வ்யஸநமும் அநுஸந்திக்க வல்லளாய், பின்பு, "அவனைக் கிட்டியல்லது நில்லேன்" என்னும் ஆற்றாமையும் பிறந்து, அது பெறாமையாலே அவஸந்நையாக, இவள் விடாய்க்கு ஈடாம்படி அணித்தாகத் தென்திருப்பேரையிலே விற்றிருந்த மகரநெடுங்குழைக்காதனுடைய அபேக்ஷிதாதிகளிலே அபஹ்ருத சித்தையாய், "அவனிருந்தவிடத்தேறப் போகவேணும்" என்று ஒருப்பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரும் அவளைச் சூழப்போந்து, "உனக்கு இத்தனை அதிமாத்ர ப்ராவண்யமாகாது; நமக்கு இது பழியாய் விளையும்" என்ன; "நீங்கள் சொல்லுகிறவற்றால் ப்ரயோஜநமுண்டாகமாட்டாது, நான் அவன் பக்கலிலே அபஹ்ருத சித்தையானேன்; ஆன பின்பு, நானே போனேனாகாமே நீங்கள் என்னோடுடன்பட்டு அங்கே கொடுபோய்ச் சேர்க்கப் பாருங்கோள்" என்று தனக்குப் பிறந்த துணிவை அவர்களுக்கு அறிவித்துச் சொல்லுகிறதாயிருக்கிறது.

விளக்கம் – கடந்த திருவாய்மொழியில் பிறந்த மயக்கம் தெளிந்து பிரிவின் துன்பம் குறித்து நினைக்கவல்லவளாக, தொடர்ந்து, "அவனை அடைந்தால் அல்லாமல் நான் நிற்கமாட்டேன்" என்பதான பிரிவாற்றாமையும் ஏற்பட்டு, அதுவும் பெறாத காரணத்தால் துக்கம் நிறைந்தவளாக நின்றால். அப்போது, இவளுடைய இந்தத் தவிப்பிற்கு ஈடாக, இதனைத் தவிர்க்கும்படியாக , மிகவும் அருகில், தென்திருப்பேரெயில் என்ற திவ்யதேசத்தில் வீற்றுள்ள மகரநெடுங்குழைக்காதனுடைய புன்னகை மற்றும் கடைக்கண் பார்வைகளால் (இந்த இரண்டு குறித்து, இருபத்து நாலாயிரப்படி வ்யாக்யானத்தில் ஸ்மித வீக்ஷணாதிகள் என்று கூறப்பட்டது; ஈட்டில் அபேக்ஷிதாதிகள் என்று உள்ளது) அலங்கரிக்கபட்ட சிந்தனை நிறைந்தவளாக, "அவன் உள்ள இடத்திற்கு நான் செல்லவேண்டும்" என்ற உறுதியுடன் இருந்தாள். இதனைப் பார்த்த தோழிமார்களும் தாய்மார்களும் முன்பு போன்றே இவளிடம் வந்து, இவளைச்

சூழ்ந்து நின்று, "உனக்கு இந்த அளவிற்கு ஈடுபாடு ஏற்படக்கூடாது. இது பெரும்பழியாக வந்து சேரும்" என்றனர். இதனைக் கேட்ட இந்தப் பெண் அவர்களிடம், "உங்களுடைய இந்தச் சொற்களால் எந்தப் பயனும் ஏற்படாது. நான் அவன் விஷயத்தில் அபகரிக்கப்பட்ட சிந்தனை உடையவள் ஆவேன். அதனால், நானே அங்கு சென்றேன் என்ற பேச்சு வராமல், நீங்கள் என்னுடைய சிந்தனைக்கு உட்பட்டவர்களாக, நீங்களாகவே என்னை அங்கு கொண்டு சென்று சேர்ப்பீகளாக", என்று தனக்குப் பிறந்த துணிவை அவர்களுக்குத் தெளிவாக உணர்த்தும்படியாக உள்ளாள்.

வ்யாக்யானம் - அங்ஙனன்றிக்கே, பிள்ளான் பணிக்கும்படி: "முகில்வண்ணனடியே இவளணுகியடைந்தனள்" என்றதாகையாலே, "ஸமாத்வாத சதத்ராஹம்" என்கிறபடியே பெரியபெருமாளோடே சிரகாலம் உந்மஸ்தகரஸமான ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாய், பிரிந்து கூடாவிடில் இரண்டு தலைக்கும் அழிவு வருமளவாச்சுதாய், இனியெல்லாவளவிலும் ஒரு நீராகக் கலக்கிறது தர்மியிரண்டும் கூடியிறே; ஆகையாலே, பிரியாவிடில் தர்மிலோப பர்யந்தமாகப் புக, இவ்வளவில், நாயகனான இவன் இரண்டு தலையும் ஜீவிக்கப் பார்ப்பானொருவனாகையாலே பிரிவை ப்ரஸங்கிக்க, இவளும் விச்லேஷத்தில் வாஸநையில்லாதாளொருத்தியாகையாலே "கலவியிலேயொரு வகையோ" என்று கொண்டு இவளும் அனுமதி பண்ண, அவனும் அவ்வேட்டை நிமித்தமாகப் புறப்பட, இனைம் திருவணுக்கன் திருவாசலிளவும் ஒருப்படுத்தி மீள, எல்லாவளவிலும் பிரிவு தன் காரியம் செய்தன்றி நில்லாதிறே; அநந்தரம் இவள் நோவுபடப் புக, இத்தைக் கண்டதோழிமாரும் தாய்மாரும் "உனக்கு ஓடுகிறதென்?" என்று கேட்க, "ஸ்ரீஜநகராஜன் திருமகள் காட்டிலே கூடப் போய் அவரிருந்தவிடம் நின்றவிடம் உலாவினவிடந்தோறும் கூடவிருந்து அநுபவித்தாற் போலே, நானும் அவனிருந்தவிடத்தே போய்ப் புக்கல்லது நில்லேன்" என்ன; "உனக்கு இது தலைமைக்குப் போராது; நீ சொல்லுகிறவை வார்த்தையன்று" என்ன; "அவர்களை நீங்கள் நிரோதிக்கிறத்தால் பெற்றதென்? நான் போகை தவிரேன்; நீங்களே என்னைக் கொடுபோய் விடுங்கோள்" என்ன; அவர்கள் "அதுக்கு நாங்கள் வழிப்படோம்" என்ன; "ஆகில் நானேயாகிதும் போகை தவிரேனென்கிறாள்" என்று.

விளக்கம் – இதற்கு இவ்விதம் பொருள் கொள்ளாமல், பிள்ளான் வேறுவிதமாகக் கூறுகிறார். “அணுகி அடைந்தனள்” என்பதற்கு, “நேரடியான சேர்க்கை” என்று பொருள் கொண்டு கூறுகிறார். “முகில்வண்ணன் அடியே இவள் அணுகி அடைந்தனள்” என்று கூறியதால், ஸுந்தரகாண்டம் (32-17) - ஸமாத்வாத சதத்ராஹம் - அங்கு இராமனுடைய மாளிகைகளில் பன்னிரண்டு ஆண்டுகள் இனிமையை அனுபவித்தேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, பெரியபெருமாளுடன் நீண்டகாலம் பரிபூர்ணமான சேர்க்கை உண்டானது. ஆனால் இவ்விதம் சேர்ந்த பின்னர் பிரியவேண்டியது ஏன் என்பதற்கு விடை தருகிறார்; பிரிந்து சேராவிட்டால், இரண்டு பேருக்கும் அழிவு ஏற்படும் என்றாயிற்று. ஆனால், ஒரே பொருள் என்று கூறலாம்படி கலந்த பின்னர் பிரிவு எற்படுமோ என்பதற்கு விடை தருகிறார்; இனி அனைத்து அளவிலும் ஒரே நீராகக் கலத்தல், அதாவது ஒரே பொருள் என்று கூறலாம்படி ஆதல் என்பது, தர்மிகள் இரண்டும் சேர்ந்து அல்லவோ? எனவே பிரியாமல் இருந்தால், தர்மியே அழியும் நிலை ஏற்படும் என்றானது. அப்போது நாயகனாகிய எம்பெருமானுக்கு, இரண்டு பேரும் பிழைக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளதால், பிரிவு என்பதைக் குறித்துப் பேசினான். இதனைக் கேட்ட இவள், “பிரிவு என்பது கூடாது” என்று கூறாமல், பிரிவில் சற்றும் விருப்பம் இல்லாதவள் என்றாலும், “இத்தகைய பிரிவும், சேர்க்கை என்ற கலவியில் ஒரு வகையோ" என்று எண்ணினாள். இதற்கு அனுமதியும் அளித்தாள். இவளுடைய அனுமதியைப் பெற்றவுடன் அவனும் வேட்டையாடுதல் என்ற ஒரு காரணத்தைக் கைக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். இவளும் திருவரங்கத்தின் கர்பக்ரஹத்தின் முன்வாசல் முடிய வந்து ஒருப்படுத்தி நின்று திரும்பினாள். சரி, இவளும் பிரிவதற்கு அனுமதி அளித்தாள் என்றால், ஏன் துக்கம் கொள்ளவேன்டும் என்பதைக் கூறுகிறாள்; எந்த நிலையாகவோ அல்லது கலவி இலக்கணம் என்பதாகவோ உள்ளபோதிலும், பிரிவானது தனது செயல்பாட்டைக் காண்பிக்காமல் இருக்காது அல்லவோ? ஆகவே அதன் பின்னர் இவள் துக்கம் அடைந்தாள். இதனைக் கண்ட தோழிமாரும் தாய்மாரும், “உனது எண்ணத்தில் உள்ளது என்ன?”, என்றனர். இதற்கு இந்தப் பெண் விடை தருகிறாள்; “ஸ்ரீஜநகராஜனுடைய திருமகளான ஸீதை, இராமனுடன் கானகம் சென்று, அவர் இருந்த இடம், நின்ற இடம், உலவிய இடம் என்று அனைத்து இடங்களிலும் அவருடன் இருந்தவளாக அனுபவித்தாள். இதனைப் போன்றே நானும் அவன் இருந்த இடம் சென்று சேர்வது அல்லாமல் நிற்கமாட்டேன்", என்றாள். இதற்கு இவர்கள், “இது உனது பணிவிற்குச் சேராது. நீ கூறும் சொற்கள் அனைத்தும் சொற்களே அல்ல", என்றனர். இதற்கு இவள், “நமது கூட்டத்தைச் சேர்ந்தவர்களை

நீங்கள் ஏற்பதால், என்னைப் பெற்ற பயன் என்ன? நாம் அங்கு செல்வதைத் தவிர்க்கப் போவதில்லை. நீங்கள் என்னை அங்கு கொண்டு சென்று சேர்ப்பீர்களாக", என்றாள். இதற்கு இவர்கள், "நாங்கள் அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டோம்", என்றனர். இதற்கு இவள், "அப்படியென்றால் நானே அங்கு செல்கிறேன்", என்றாள். இப்படியாகப் பிள்ளான் கருத்தாகும்.

வ்யாக்யானம் – (ஸமா த்வாதச சதத்ராஹம்) இப்போது காதாசித்க தர்சநமுங் கூட அரிதாம்படியிருக்கிற நான், முன்பு சிரகாலம் அவரோடேயநுபவிக்கப் பெற்றேன்காண். (ராகவஸ்ய நிவேசநே) எங்கள் மாமனாருடைய மாளிகையிலே அவர் தண்ணீர்த் துரும்பறுத்துத் தர, நெடுங்காலம் அநுபவித்தேன். (புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ) "ஸர்வாந்காமாந்" என்கிறபடியே எல்லாம் அநுபவிக்கப் பெற்றேன். அப்படியுமன்றிறே இங்கு. (பஹவோ ந்ருப கல்யாணகுணா:) என்று குணங்களிரட்டித்தவிடமிறே இது.

விளக்கம் – முன்பு எடுத்த ஸுந்தரகாண்டம் (33-17) - ஸமா த்வாதச சதத்ராஹம் - என்பதற்கான வ்யாக்யானம் அருளிச்செய்கிறார்; (ஸமா த்வாதச சதத்ராஹம்) - இப்போது அவனுடைய தரிசனம் என்பது எப்போதாவது மட்டும் கிட்டும் என்னும்படியாக அரிதாக உள்ளது. இப்படி உள்ள நான், முன்பு அவருடைய மாளிகையில் பல காலம் அவருடன் சேர்ந்து அனுபவித்தேன். (ராகவஸ்ய நிவேசநே) - எங்கள் மாமனார் மாளிகையில் அவர் அனைத்துத் தடைகளையும் விலக்கித் தர, நீண்ட காலம் அனுபவித்தேன். (புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ) – தைத்திரீயத்தில் – ஸர்வாந் காமாந் - - அனைத்து விருபங்களையும் – என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து இன்பங்களையும் அனுபவிக்கப்பெற்றேன். ஆனால், உபநிஷத்தில் "ஸர்வாந்காமாந்" கூறப்பட்டது பரமபதத்தைக் குறித்து அல்லவோ என்றால்,அது போன்றே இங்கும் இருந்தது என்று கருத்து. அயோத்யாகாண்டம் (2-26) - பஹவோ ந்ருப கல்யாணகுணா: - அரசே! கல்யாணகுணங்கள் பல உண்டு - என்பதற்கு ஏற்ப, குணங்கள் இரட்டிப்பாக ஆகிய இடம் இங்கு அல்லவோ?

வ்யாக்யானம் - ஆக இத்தால் சொல்லிற்றாயிற்று: நமக்கு சப்தாதி விஷயங்களினின்றும் இந்திரியங்களை மீட்கவொண்ணாதாப் போலேயிறே இவரை பகவத்விஷயத்தினின்றும் மீட்கவொண்ணாதபடி. அது கர்மமடியாக வருகிறது; இது பகவத் ப்ரஸாதமடியாக வருகிறது. திருத்தாயார் பேச்சாய்

வருகிறவை, ஆழ்வார் தமக்குப் பிறந்த தசாவிசேஷம், தலைமகளாய்ப் பேசுகிறதும் இவர்க்குப் பிறந்ததோர் அவஸ்தாவிசேஷம்; அதில், நிஷேதிக்கிற திருத்தாயார் முகத்தாற் சொல்லுகிறது, ஸ்வருபமான ப்ராவண்யத்திலே உபாயத்வம் சேரிற் செய்வதென் என்னுமதுக்குச் சொல்லுகிறது; பெண்பிள்ளை கருத்தாற் சொல்லுகிறது, உபாயம் அவனேயாகில் ப்ராவண்யம் ஸ்வரூபமாமத்தனையன்றோ என்று. ஆக, இவ்விரண்டர்த்தத்தையும் இரண்டு முகத்தாலே ஆழ்வார் தாம் அநுஸந்தித்தபடியைச் சொல்லுகிறது. மோஹமுந் தெளிந்து தானே கூப்பிட வல்லளான இதுவே இத்திருவாய்மொழிக்கு ஏற்றம்.

விளக்கம் – ஆக இதன் மூலம் கூறப்பட்டது என்ன? நமக்கு புலன் விஷயங்களிலிருந்து நம்முடைய இந்த்ரியங்களை மீட்டு எடுக்க இயலாதபடியாக உள்ளது போன்று, இவரை பகவத் விஷயத்திலிருந்து மீட்டு எடுக்க இயலாதபடி உள்ளது. இதன் காரணம் நம்முடைய இந்த்ரிய ஈடுபாடானது கர்மம் காரணமாக வருவதாகும், இவருடைய பகவத் விஷய ஈடுபாடானது பகவத் க்ருபை காரணமாக வருவதாகும். திருத்தாயாராக உள்ள நிலை மற்றும் தலைமகளாக உள்ள நிலை ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணர்த்தத் திருவுள்ளம் கொண்டவராக, அவற்றை மீண்டும் கூறுகிறார். திருத்தாயாராக இவர் பேசும் பேச்சாக வருபவை, இவருக்கு பிறந்த ஒரு சிறப்பான நிலையாகும்; தலைமகளாக இவர் கூறும் சொற்களும் இவருக்குப் பிறந்த சிறப்பான நிலையாகும்; இவ்விதம் ஒவ்வொன்றும் ஒருவருக்கே ஏற்படும் நிலை மாறுபாடுகள் என்று கூறும்போது, “விலகுவதும், ஈடுபடுவதும்” ஒருவருக்கே ஏற்படுமோ என்று கேட்கலாம்; அதாவது திருத்தாயார் நிலையில் உள்ள இது இந்தப் பெண்ணின் ஈடுபாட்டை விலக்க முயல்வதும், தலைமகளாக உள்ளபோது ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளுதலும் ஒருவருக்கே ஏற்படுமோ என்று கேட்கலாம்; இதற்கு விடை தருகிறார். இவற்றைத் தள்ளுவதாகத் திருத்தாயார் முகத்தால் கூறுவது என்னவென்றால், “ஸ்வரூபமான ஈடுபடானது உபாயத்தில் சேர்ந்து விட்டால் என்ன செய்வது?”, என்பதாகும்; தலைமகள் கருத்தால் கூறுவது என்னவென்றால், “உபாயம் அவனாகவே உள்ளபோது, ஈடுபாடும் ஸ்வரூபம் ஆகும் அல்லவோ?", என்பதாகும். ஆக, இந்த இரண்டு ஆழ்பொருள்களையும், இந்த இரண்டு முகங்கள் முலம், ஆழ்வார் தாம் எண்ணியதைக் கூறினார். மோகம் தெளிந்து, தானே அழைக்கவல்லவளாகிய இந்த நிலையே இந்தத் திருவாய்மொழிக்கு ஏற்றம் ஆகும்.

7-3-1. வெள்ளைச் சுரி சங்கொடு ஆழி ஏந்தித் *
தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே *
புள்ளைக் கடாகின்ற ஆற்றைக் காணீர் *
என் சொல்லிச் சொல்லுகேன்? அன்னைமீர்காள்! **
வெள்ளச் சுகம் அவன் வீற்றிருந்த *
வேத ஒலியும் விழா ஒலியும் *
பிள்ளைக் குழா விளையாட்டு ஒலியும் அறாத் *
திருப்பேரெயில் சேர்வன் நானே!

பொருள் – சொல்லாலும் மனத்தாலும் விளக்க இயலாதபடியாக எனது உள்ளத்தில் ஓடுகிற மாற்றங்களை அறியாமல், “இவளைப் பெற்றவர்கள் அல்லவோ நாம்” என்று என்னை விலக்க முற்படுபவர்களே! நான் விரும்பியபடியே வெண்மையான நிறத்தையும், சுரியையும் கொண்ட ஸ்ரீபாஞ்சஜந்யத்துடன் திருவாழியையும் எந்தியபடி, நான் தளரும்படியாக என்னை மற்றவர்களுக்கு என இல்லாமல் தனக்கு மட்டுமே என்று செய்த, தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவன், நான் மட்டுமே அல்லாமல் தனது அனைத்து விபூதிகளும் உள்ளே புகுந்தாலும் இடம் உள்ள எனது நெஞ்சத்தின் உள்ளே, கருடனைத் தனது விருப்பமான முறையில் நடத்தும் விதத்தை நீங்கள் அறியமாட்டீர்கள்! இந்த அனுபவத்தை நான் என்ன சொற்கள் கொண்டு கூறுவேன்? இப்படிப்பட்ட பகவத் அனுபவம் என்பதால் அளவிட முடியாதபடியான இன்பம் என்ற ஸமுத்திரம் கொண்டதாகவும்; எனது நெஞ்சத்தில் எப்போதும் ப்ரகாசித்தபடி உள்ள அவன் தனது மேன்மை வெளிப்படும்படியாக உள்ள இடமாக உள்ள்ளதாவும்; அந்த அழகான வீற்றிருந்தல் என்பதை அனுபவிப்பவர்களுடைய வேத கோஷமும், எப்போதும் உத்சவம் உள்ளதால் ஏற்படும் வாத்யங்களின் ஒலியும், அவனுடைய குணங்களையும் விளையாட்டுக்களையும் எப்போதும் கொண்டாடியபடி விளையாடும் குழந்தைகளுடைய ஒலியும் எப்போதும் கேட்டபடி உள்ளதும் ஆகிய திருப்பேரெயில் என்ற இடத்திற்கு நான் சென்று சேர்வேன்.

அவதாரிகை - இப்பிராட்டி வாசாமகோசரமாம்படி தனக்கு வர்த்திக்கிற வ்யஸநத்தாலே தென்திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப் பிறந்த தசையை வினவுகிற திருத்தாய்மார்க்குச் சொல்கிறாள்.

விளக்கம் – சொற்களால் விவரிக்க இயலாதபடி தனக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தால் துவண்ட இந்தப் பராங்குசநாயகியானவள், தென்திருப்பேரைக்குச்

செல்லவேண்டும் என்று தனக்கு ஏற்பட்ட நிலையை, தன்னைக் குறித்து வினவுகின்ற திருத்தாய்மார்களிடம் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தி) "தவளவொண் சங்கு சக்கரம்" என்றும், "கூராராழி வெண்சங்கு" என்றும், "சங்குசக்கரங்களென்று கைகூப்பும்" என்றும் கையுந் திருவாழியுமான அழகு கைவிடாதே இவரை யநுவர்த்திக்கிறபடி. "முகில்வண்ண"னிறே; அந்நிறத்துக்குப் பரபாகமான வெளுப்பையும், சுரியையுமுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், அங்ஙனமொரு விசேஷணமிட்டுச் சொல்லவேண்டாதபடியான அழகையுடைத்தான திருவாழியையும் ஏந்தி.

விளக்கம் – (வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தி) - திருக்கண்களுக்கு முன்பாக, அவனுடைய திவ்ய ஆயுதங்கள் குறித்து ஏன் கூறினார் என்றால், திருவாய்மொழி (6-5-1) - தவளவொண் சங்கு சக்கரம் - என்றும், திருவாய்மொழி (6-9-1) - கூராராழி வெண்சங்கு - என்றும், திருவாய்மொழி (7-2-1) - சங்குசக்கரங்களென்று கைகூப்பும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள, "திருக்கரமும் திருவாழியும்" என்பதான சேர்க்கை அழகானது இவரை விடாமல் தொடர்ந்தபடி உள்ளதால் ஆகும். "முகில் வண்ணன்" அல்லவோ? இந்த நிறத்திற்குச் சேரும் விதத்தில் உள்ள வெண்மை மற்றும் சுரி கொண்ட ஸ்ரீபாஞ்சஜயம்; "வெள்ளை" என்று சங்கிற்கு அடைமொழி அளித்தது போன்று கூறாமல் வெறுமனே "ஆழி" என்று கூறியதன் கருத்து, அவ்விதம் சிறப்பான அடையாளம் இட்டுக் கூறவேண்டிய அவசியம் இல்லாதபடியான அழகு கொண்ட சக்கரம்; இவற்றை ஏந்தியவனாக.

வ்யாக்யானம் - (தாமரைக்கண்ணன்) "தாமரைக் கண்ணனென்றே தளரும்" என்றது பின்னாட்டுகிறபடி. திருமேனிக்கு திவ்யாயுதங்கள் ப்ரகாசகமாயிருக்குமாப்போலே, ஆத்மகுணங்களுக்கு நோக்கு ப்ரகாசகமாயிருக்கிறபடியும். அகவாயில் தண்ணளியெல்லாம் கண் வழியேயிறே தோற்றுவது. ப்ரதிகூலர்க்கு திவ்யாயுதங்களோடொக்கத் திருக்கண்களும் விரோதியாய்த் தோற்றுமாப் போலேயிறே, அநுகூலர்க்குத் திருக்கண்களோபாதி திவ்யாயுதங்களும் அழகுக்கு உடலாய்த் தோற்றும்படி. திருக்கண்களோடே திவ்யாயுதங்களையும், திவ்யாயுதங்களோடே திருக்கண்களையும் சேர்த்தநுபவிப்பர்கள். ஆயுதங்களோடே திருக்கண்களைக் கூட்டுகிறது தோற்பித்தபடிக்கு; "ஜிதந்தே" என்னப் பண்ணுமிறே. கண்களோடு திவ்யாயுதங்களைக் கூட்டுகிறது அழகுக்கு. இவ்விடத்தே நிலாத்துக்குறிபகவர் வார்த்தையை யருளிச்செய்வர் ஜீயர். கைக்கு ஆழ்வார்கள்

ஆபரணமாயிருக்குமாப் போலேயாயிற்று, முகத்துக்குத் திருக்கண்கள் ஆபரணமாயிருக்கும்படியும். “திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன் நிகழும் அருக்கனணி நிறமுங் கண்டேன் செருக்கிளரும் பொன்னாழி கண்டேன், புரிசங்கைக் கண்டேன், என்னாழி வண்ணன்பால் இன்று” என்று வடிவழகோபாதி திவ்யாயுதங்களும் ஆபரணமாய் அழகியதாயிறேயிருப்பது. ஆழ்வார்கள்தான் அவனைக் கைசெய்திருக்கையாலே ஆபரணகோடியாயிறே இருப்பது. கைசெய்கையென்று அலங்கரிக்கைக்குப் பேர்.

விளக்கம் - (தாமரைக்கண்ணன்) - திருவாய்மொழி (7-2-1) - தாமரைக் கண்ணென்றே தளரும் - என்று முன்பு கூறியது இப்போதும் இவளுக்குத் தொடர்ந்தபடி உள்ளது. திவ்யமான ஆயுதங்களுடன் திருக்கரங்களையும் சேர்த்துக் கூறியதற்கு வ்யாக்யானத்தில் “திருமேனிக்கு” என்று தொடங்கியும், “ப்ரதிகூலர்க்கு” என்று தொடங்கியும் கருத்து அருளிச்செய்கிறார். திருமேனிக்குத் திவ்ய ஆயுதங்கள் ப்ரகாசமாக இருக்கும்; அதாவது ப்ரகாசமான உள்ள தன்மை மற்றும் கவர்ந்து இழுக்கவல்ல தன்மை ஆகிய இரண்டும் இவை இரண்டிற்கும் ஒத்துப்போவதால் சேர்த்துக் கூறுகிறார் என்றும் கொள்ளலாம்; அவ்விதம் ப்ரகாசப்படுத்துவதாக இருக்குமோ என்பதற்கு விடை தருகிறார். உள்ளத்தில் இருக்கின்ற ஈடுபாடு முழுவதும் கண்கள் வழியாக அல்லவோ வெளிப்படும்? அவனுடைய விரோதிகளுக்குத் திவ்ய ஆயுதங்கள் போன்றே, அவனுடைய திருக்கண்களும் விரோதியாகத் தோன்றுவது போன்று, அவனுடைய அடியார்களுக்குத் திருக்கண்கள் போன்றே திவ்ய ஆயுதங்களும் அழகுக்கு இடமாகத் தோன்றுகின்றன என்று கருத்து. திருக்கண்கள் விரோதியாகத் தோன்றியதற்கான ப்ரமாணம் “துச்சாதனனை அகல விழித்தானே” என்பதாகும். திவ்ய ஆயுதங்களுடன் அவயவங்களையும், திவ்ய அவயவங்களுடன் திவ்ய ஆயுதங்களையும் சேர்த்து அனுபவிப்பார்கள். இவ்விதம் சேர்த்து அனுபவிப்பதன் காரணத்தை வ்யாக்யானத்தில் “ஆயுதங்களோடே” என்று தொடங்கும் மூன்று வாக்கியங்களால் கூறுகிறார்; ஆயுதங்களுடன் சேர்ந்து அவனுடைய திருக்கண்களும் தோற்கடிக்கும் என்பதற்கு ப்ரமாணம் ஜிதந்தே (1) – ஜிதந்தே - உனக்குத் தோற்றோம் – என்பதாகும்; திருக்கண்களுடன் ஆயுதங்களைச் சேர்த்தற்குக் காரணம் அழகிற்காகவும் ஆகும். இங்கு நிலாத்துக்குறிபகவர் என்பவர் ஸ்வாமி பராசரபட்டரிடம், “பகவான் இரண்டு திருக்கரங்கள் கொண்டவனோ அல்லது நான்கு திருக்கரங்கள் கொண்டவனோ என்று கேட்டதற்கு, பட்டர் அருளிச்செய்த சொற்களை நஞ்சீயர் நினைவு கூருவர். அடுத்து, ஒப்பனை அழகாலும், திவ்ய ஆயுதங்கள் மற்றும் திருக்குணங்களுக்குச்

சேர்த்தி உள்ளது என்பதை மூன்றாவதாக ஒரு கருத்தினால் அருளிச்செய்கிறார்; திருக்கரங்களுக்கு திவ்ய ஆயுதங்களாகிய சங்கு சக்கரம் முதலானவை அழகாக உள்ளதைப் போன்று, திருமுகத்திற்குக் கண்கள் ஆபரணமாக உள்ளன; இவ்விதம் திருமுகத்திற்குக் கண்கள் ஆபரணமாக உள்ளதற்கு ப்ரமாணம் மூன்றாம் திருவந்தாதி (1) - திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன் நிகழும் அருக்கனணி நிறமுங் கண்டேன் செருக்கிளரும் பொன்னாழி கண்டேன், புரிசங்கைக் கண்டேன், என்னாழி வண்ணன்பால் இன்று - என்று வடிவழகு போன்றே திவ்ய ஆயுதங்களும் ஆபரணங்களாக உள்ளன. திவ்யமான ஆயுதங்களாகிய அவை, அவனுக்கு "அலங்கரித்தல், துணை செய்தல், போர் செய்தல்" போன்றவற்றைச் செய்வதால், ஆபரணங்களுடைய வரிசையிலும் இருப்பவை ஆகும்.

வ்யாக்யானம் - (என்னெஞ்சினூடே) தங்கள் நெஞ்சிலில்லாமையாலே "இது கூடாது" என்றிருப்பர்களிறே. (என்னெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற) இவர்க்கு மயர்வற மதிநலமருளி, "நெஞ்சமே நீணகர்" என்னும்படியிறே திருத்திற்று; ஒரு த்ரிபாத் விபூதியிலும் இடமுடைத்தாயிருக்கை. திருவடி திருத்தோளிலேயேறி அங்குள்ளார்க்கு உஜ்ஜீவநமாகச் சாரிகை வந்து காட்டுமாப்போலே, இவர் நெஞ்சிலுள்ளே ச்ருங்கலமாக அழகு செண்டேறுகிறபடி. (நெஞ்சினூடே) "அகவாயிலிலுள்ளது கண்ணுக்குத் தெரியாதோ?" என்றிருக்கிறார்களாயிற்று இவர்கள். "நிர்க்குண: பரமாத்மாஸௌ தேஹம் தேவ்யாப்யதிஷ்டதி" என்னுமாப்போலே. "நெஞ்சிலில்லையாகில் நானுமில்லையென்று நினைத்திருக்கலாயிற்றுக்கிடீர்" என்றிருகிறாள் இவள்.

விளக்கம் – (என்னெஞ்சினூடே) – தாய்மார்கள், தங்களுடைய நெஞ்சத்தில் அவன் இல்லாத காரணத்தால் "இது கூடாது" என்று தடுத்தபடி இருப்பார்கள். (என்னெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற) - ஆனால் அணுவாகிய நெஞ்சத்தில் அவன் உள்ளானோ என்பதற்கு விடை கூறுகிறார்; இவருக்கு "மயர்வற மதிநலம்" அருளி, திருவாய்மொழி (3-8-2) – நெஞ்சமே நீள் நகர் - என்பதாக அல்லவோ செய்தான்? பரமபதத்தின் அளவிற்கு இங்கும் இடம் உள்ளது. கருடனுடைய திருத்தோள்களில் ஏறிக்கொண்டு பரமபதத்தில் உள்ளவர்களுக்கு வையாளி எனப்படும் வேடிக்கையான நடைகளைக் காண்பித்து அவர்களைத் தரிக்கும்படிச் செய்வது போன்று, இவருடைய நெஞ்சத்தில் தடையின்றி தனது அழகைக் காண்பித்துக் கொண்டு புறப்படுகிறான். (நெஞ்சினூடே) – "நெஞ்சத்தில் உள்ள விஷயம் கண்களுக்குப் புலப்படாது" என்று இவர்கள் உள்ளனர்; ஆனால் அவ்விதம் உள்ளே இருப்பது வெளியே தென்படும் என்பதற்கு ப்ரமாணம்

மஹாபாரதத்தில் - நிர்க்குண: பரமாத்மாஸௌ தேஹம் தேவ்யாப்யதிஷ்டதி - தோஷம் இல்லாத பரமாத்மா, சரீரம் முழுவதும் நிரம்பி நிற்கிறான் - என்பது காண்க. "நெஞ்சத்தில் அவன் இல்லை என்றால், நானும் இல்லை என்னும்படி எனது நிலையை எண்ணவேண்டும்", என்பதாக இவள் உள்ளாள்.

வ்யாக்யானம் - (ஒரு வாசத்தடத்தில்) ஹம்ஸ சக்ரவாகங்கள் போலே ஆழ்வார்களும், காடு பட அலர்ந்த தாமரை போலேயிருக்கிற திவ்யாவயங்களும், அத்தடாகத்தில் நீரும் இலையும் போலேயிருக்கிற திருமேனியுமாய், அத்தைக்கினிய ஒரு மேரு வலித்தாப் போலேயிருக்கிற பெரியதிருவடியோடே கூட இவர் திருவுள்ளத்தே உலாவுகிறபடி. இப்படியேயிறே அதுகூலரோடு பரிமாறும்படி. நஞ்சீயர் கோயிலுக்கெழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக் கண்டு, "ஈச்வர ஸ்வரூப வ்யாப்தியேயோ, விக்ரஹ வ்யாப்தியும் உண்டோ?" என்று கேட்க; "பாஷ்யகாரர் தோற்றவருளிச் செய்து கொண்டு போந்தது ஸ்வரூப வ்யாப்தியாயிருக்கும். ஆகிலும், எம்பார் ஒருநாள் 'உபாஸகாநுக்ரஹார்த்தமாக ஆச்ரிதருடைய நெஞ்சிலே விக்ரஹத்தோடே வ்யாபித்திருக்கும்' என்று அருளிச் செய்யக் கேட்டேன்" என்று பணித்தான். "குஹாயாம்", "கஹ்வரேஷ்ட்டம் புராணம்", "அரவத்தமளியினோடுமழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையுந் தானும் அகம்படி வந்து புகுந்து" என்றும், "யேஷாமிந்தீவர ச்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்ட்டித:" என்றும், "என்னெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற" என்றுஞ் சொல்லுகிறபடியே.

விளக்கம் – (ஒரு வாசத்தடத்தில்) - ஹம்ஸம் மற்றும் சக்ரவாகப் பறவைகள் போன்றுள்ள திவ்யமான ஆயுதங்களும், காடு முழுவதும் படர்ந்து மலர்ந்து நிற்கும் தாமரைகள் போன்றுள்ள திவ்யமான அவயவங்களும், அந்தத் தடாகத்தில் உள்ள நீரும் இவையும் போன்றுள்ள இவன் திருமேனியும், அந்தத் தடாகத்தை ஒரு பெரிய மேரு மலை தாங்கி நிற்பது போன்றுள்ள கருடனும் என்பதாகத் தோன்றி இவருடைய நெஞ்சத்தில் உலவுகிறான். இவ்விதம் அல்லவோ இவன் இவருடைய நெஞ்சத்தில் விக்ரஹ ரூபமாக உள்ளான் என்பதற்கு ஒரு உரையாடலை ப்ரமாணமாகக் காண்பிக்கிறார். ஒருநாள் நஞ்சீயர் திருவரங்கம் பெரியகோயிலுக்குச் செல்லும் வழியில் திருக்குருகைப்பிரான் பிள்ளையை வழியில் கண்டு அவரிடம், "அடியார்களுடைய மனதில் ஈச்வரனுடைய ஸ்வரூபம் பரவியுள்ளதா அல்லது திருமேனி பரவி நிற்கிறதா?", என்று கேட்டார். இதற்குப் பிள்ளான், "எம்பெருமானார் வ்யாக்யானம் செய்தபோது, அவனுடைய ஸ்வரூபமே

பரவி உள்ளது என்றார். ஆனால் ஒருநாள் எம்பார் கூறும்போது, உபாஸகர்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்காக, அவர்களுடைய மனதில் திருமேனி வடிவத்திலேயே அவன் பரவி நிற்கிறான் என்று கூறியதைக் கேட்டேன்", என்று விடை அளித்தார். இவ்விதம் திருமேனியே பரவி நிற்கிறது என்பதற்கான ப்ரமாணங்கள்: தைத்திரீயத்தில் - குஹாயாம் - மனம் என்ற குகையில் உள்ளான் – என்றும், கட உபநிஷத்தில் - கஹ்வரேஷ்ட்டம் புராணம் - மனத்தில் உள்ள புராண புருஷன் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (5-2-10) - அரவத்தமளியினோடுமழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையுந் தானும் அகம்படி வந்து புகுந்து – என்றும், இராமாயணத்தில் - யேஷாமிந்தீவர ச்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்ட்டித: - யாருடைய மனதில் கறுத்த பகவான் அமர்ந்துள்ளானோ - என்றும், இந்தப் பாசுரத்தில் "என்னெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற" என்றும் கூறும் பலவும் ஆகும்.

வ்யாக்யானம் – சுபாச்ரய ப்ரகரணங்களிலும் "தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்கிறபடியே அவ்வடிவேயாயிற்று த்யேயமாகச் சொல்லுகிறது. பின்பு "ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து" என்று கொடுப்பதும் அவ்வடிவேயாயிற்று. புறம்புள்ளார் சொன்னபடி சொல்கிறார்கள்; நம் ஆழ்வார்கள் போன வழி இதுக்கு மேற்படவில்லை; 'இதுக்கு முன்னே ஒன்றுண்டு' என்று சொல்லுகிறவர்கள், ஸ்வரூப ஸத்பாவஞ் சொல்லுகிறார்களித்தனை; விக்ரஹமில்லையென்றன்று.

விளக்கம் – ஆனால் விக்ரஹங்கள் கல்பிக்கப்பட்டவை என்று கூறுகிறார்களே என்றால் அவை உண்மையானவை என்பதற்குப் பொருத்தமான ப்ரமாணங்களைக் கூறுகிறார். த்யானத்திற்கு மங்களகரமான இலக்குகள் மற்றும் இடங்கள் குறித்துக் கூறும்போது, முண்டகம் (3-2-3) - தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் - தன்னால் யார் ஒருவன் விரும்பப்படுகிறானோ அவனுக்கு அந்தப் பரமாத்மா தனது ஸ்வரூபத்தை காண்பிக்கிறான் - என்பதற்கு ஏற்ப, அத்தகைய வடிவமே த்யானத்திற்கான வஸ்துவாக உள்ளதைக் கூறுகிறார். மேலும் யுத்தகாண்டம் (1-13) - ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து – இராமன் அனுமனை அணைத்துக் கொண்டு, "இந்த அணைத்தல் என்பது அனைத்தையும் அளிக்கவல்லது", என்றான் - என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்தையும் அளிப்பது அந்த வடிவமே என்பதாக உள்ளது. ஆக இப்படியாக, "உபாஸன நேரத்தில் அவனுடைய திருமேனியை த்யானிக்கப்பட வேண்டிய வஸ்துவாகக் கூறுவதாலும், பலன் அளிக்கும் வேளையில் பலனை அளிப்பதும் அதுவே என்பதாலும், சாந்தோக்யத்தில் - ஸதா பச்யந்தி - எப்போதும் பார்த்தபடி உள்ளனர் - என்பதற்கு ஏற்ப பார்வைக்கு

விஷயமாக உள்ளதாலும், விக்ரஹமானது கல்பிக்கப்பட்டது அல்ல என்று கருத்து. ஆனால், “அனைத்தும் மாயை” என்று கூறுபவர்கள் இதனை ஏற்கவில்லையே என்று கூறினால், “அவர்கள் கருத்தினால் நமக்கு என்ன பயன் உள்ளது” என்றும், “நம்முடைய ஆழ்வார்கள் நமக்குக் கூறியதே நம்மால் நம்பத்தக்கதாக உள்ளது” என்றும் கூறுகிறார்; மற்றவர்கள், அவர்கள் கூறும்படிக் கூறட்டும், நம்முடைய ஆழ்வார்கள் சென்ற வழியானது இதனை அல்லாமல் வேறு ஏதும் இல்லை. ஆனால், “தத் ஏக அவயவம் தேவம்” என்பது போன்றவை மூலம், “விக்ரஹத்தை விட்டு அப்பால் செல்வர்” என்று கூறப்பட்டதே என்று கேட்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; “இந்த விக்ரஹத்திற்கும் உள்ளே ஒன்று உண்டு” என்று கூறுபவர்கள், ஸ்வரூபத்தில் உண்மையைக் கூறுகிறார்கள், “விக்ரஹம் இல்லை” என்று கூறவில்லை.

வ்யாக்யானம் - (புள்ளைக் கடாகின்ற) “அகவாயில் நின்று சுழிக்குமத்தனையோ?” என்று அவன் த்வரித்து வடிம்பிட்டுத் தாக்க, “ஓம் காண்! நீயறிந்தாயோ?” என்று ப்ரேரித்து, மீளாநிற்கும்; “தீமத:” என்கிறபடியே, பக்ஷபாதத்தோடே சேர்க்கையிலேயிறே அவனுக்கும் பணி. (கடாகின்ற) பூதமாய் விஸ்மரிக்கிறிகோளன்று, பவிஷ்யமாய் உபதேசிக்கிறதன்று, வர்த்தமாநத்துக்கு உபதேசம் வேணுமோ? (காணீர்) காண்கிறிலீர். வர்த்தமாநமும் கார்யகரமன்றிக்கே யொழிகிறது நிரோதிக்கிற நிர்பந்தத்தாலேயிறே. “உங்களுக்குக் குரகோஷம் கேட்கிறதில்லையோ? ப்ரஸித்தமான அர்த்தம் உபதேசிக்க வேண்டுவதே. (காணீர்) உங்களுக்குக் கண்ணும் செவியுமின்றிக்கே யிருந்தோ நிஷேதிக்கிறது? என்னைப் போலே உட்கண்ணாலே காணிகோள்!

விளக்கம் – (புள்ளைக் கடாகின்ற) – கருடனை “கடாகின்ற” என்று அஃறிணையாக ஏன் கூறினாள் என்பதற்கு விடை அளிக்கிறார்; “உள்ளத்தில் துக்கம் வைத்துத் தவித்தபடி உள்ளாள்” என்று அவன் விரைந்து செல்லும்படியாக கருடன் அவனை நிர்ப்பந்தம் செய்ய, அவன் “ஓ! நீ அறிந்தாயோ” என்று தூண்டியபடி உள்ளான். இவ்விதம் ஈச்வரனைக் காட்டிலும் துன்பம் கொண்டவர்களைக் காப்பாற்றும் தவிப்பு கருடனுக்கு உள்ளதோ என்பதற்கு விடை தருகிறார்; ஸுந்தரகாண்டம் (16-4) - தீமத: - அறிவுள்ளவன் - என்பதற்கு ஏற்ப, தனது சிறகுகள் மூலம் சென்று, அவனை அவரவர்களிடம் சேர்த்தலே கருடனுடைய பணியாக உள்ளது அல்லவோ? (கடாகின்ற) – “கடாகின்ற” என்பதற்கு “நடத்துகின்ற” என்று பொருள். இந்தச் சொல்லை, “காணீர்” என்பதுடன் சேர்த்துக் கொண்டு, வ்யாக்யானத்தில்

“பூதமாய்” என்று தொடங்கும் மூன்று வாக்கியங்களைக் கூறுகிறார்; முன்பு நடந்ததை நீங்கள் மறக்கவில்லை, இனி வருவதையும் உபதேசம் செயவில்லை, இப்போது நடப்பதற்கு உபதேசம் செய்யவேண்டுமோ? இப்படியாக உள்ளபோது ஏன் உபதேசிக்கவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; “காணீர்” என்ற சொல்லின் பொருள் அருளிச்செய்தபடி, அதற்கான காரணத்தைக் கூறுகிறார்; இதனை வ்யாக்யானத்தில் உள்ள “காண்கின்றிலீர்" என்று தொடங்கி உள்ள இரண்டு வாக்கியங்கள் கூறுகின்றன; (காணீர்) - இப்போது நடப்பதையும் நீங்கள் தடுக்க முயல்வது என்பது, “தடுக்கவேண்டும்” என்ற நிர்ப்பந்தம் காரணமாக அல்லவோ? “காணீர்” என்பதற்கு “காண்கிறீலீர்” மற்றும் “காணுங்கோள்” என்று இரண்டு பொருள் கூறுகிறார்; இவற்றில், “காணுங்கோள்” என்பதான இரண்டாவது கருத்தை, “காதுகள், புறக்கண்கள் மற்றும் அகக்கண்” மூலம் காணவேண்டும் என்று மூன்றுவிதமாக அருளிச்செய்கிறார்; உங்களுக்குக் குளம்பின் ஒலி கேட்கிறது அல்லவோ? மிகவும் அறிந்த விஷயத்தையும் உங்களுக்கு உபதேசம் செய்யவேண்டியதாக உள்ளதே! (காணீர்) - உங்களுக்குக் கண்களும் காதுகளும் இல்லாமல் உள்ளதோ? அதன் காரணமாக என்னைத் தடுக்கிறீர்களோ? அல்லவே, உங்களுக்கு இவை இரண்டும் உள்ளதே? என்னைப் போன்று அகக்கண்களால் நீங்கள் காண்பீர்களாக.

வ்யாக்யானம் – “நாங்கள் கண்டிலோம்; கண்ட நீ சொல்லிக் காணாய்!” என்றார்கள். (என் சொல்லிச் சொல்லுகேன்) எனக்குச் சொல்லவாவதில்லை; என்ன பாசுரமிட்டு எத்தைச் சொல்லுவது? உங்கள் கண்ணுக்கு விஷயமாகாதாப்போலே என் வாக்குக்கும் விஷயமாகிறதில்லை. இவர்க்கு நெஞ்சு நிறைந்தது வாய் கொள்ளுகிறதில்லை காணும்! (என் சொல்லிச் சொல்லுகேன்) நான் பல ஹாநியாலே சொல்லமாட்டேன்; விஷயம், இயத்தாராஹித்யத்தாலே சொல்லி முடிக்கப் போகாது; உங்களுக்கு ப்ரதிபத்தி பண்ணுகைக்குப் பரிகரமில்லாமையால் சொல்லத்தான் வேண்டா. (அன்னைமீர்காள்) ஜ்ஞாதாம்சங் கொண்டு “போதயந்த: பரஸ்பரம்” பண்ணலாயிற்றிறே ஸஜாதீயைகளானிகோளாகில். (என் சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்) எனக்கோடுகிற வ்யஸநத்துக்குப் பாசுரமில்லை; அவஸ்த்தா ஜ்ஞாநமின்றிக்கே பழமை கொண்டாடுகிறிகோளித்தனையிறே; நிஷேதிக்கைக்கு அநுவர்த்தநீயைகளாமத்தனையோ வேண்டுவது? “எங்களுக்குக் காணவும் கேட்கவும் கண்ணும் செவியுமில்லையாகில், நீதான் செய்யப் பார்த்ததென்?” என்ன; ஹிதஞ்சொல்லி மீட்க நினைப்பார் இல்லாத ஊரிலே

போய்ப்புகுமித்தனை என்கிறாள். பிரிந்து போனாரை நினைக்கவொட்டாத தேசமிறே; "நோ பஜநம் ஸ்மரந்" என்கிறபடியே.

விளக்கம் – (என் சொல்லிச் சொல்லுகேன்) - இதற்கு அவர்கள், "நாங்கள் காணவில்லை. கண்ட நீ, கூறுவாயாக", என்றனர். இதற்கு இவள் கூறத் தொடங்கினாள். எனக்குக் கூற இயலவில்லை. என்ன சொற்கள் கொண்டு எதனைக் கூறுவது? ஆனால் இவளால் ஏன் சொற்கள் கொண்டு கூற இயலவில்லை என்பதற்கு விடை தருகிறாள்; உங்கள் கண்களுக்கு புலப்படாமல் உள்ளது போன்று, எனது வாக்கிற்கும் எட்டாதபடி உள்ளது. இவருக்கு நெஞ்சத்தில் நிறைந்த விஷயமானது, வாக்கில் அடங்காமல் உள்ளது. (என் சொல்லிச் சொல்லுகேன்) - இவ்விதம் கூற இயலாமல் உள்ளதற்கு மூன்று காரணங்களை அருளிச்செய்கிறாள்; நான் வலிமை குன்றியவளாக உள்ளதால், கூற மாட்டேன்; விஷயத்தின் அளவு "இந்த அளவே" என்று கூறி முடிக்க இயலாததால், கூறி முடிக்க இயலாது; நான் கூறியதை எண்ணிப் பார்ப்பதற்கான மனம் போன்றவை உங்களிடம் இல்லை என்பதால் கூறவேண்டியதில்லை. ஆனால், "அனைத்தும் கூற இயலாது என்றாலும், அறிந்தவரை கூறலாம் அல்லவோ?", என்பதற்கு விடை தருகிறாள். (அன்னைமீர்காள்) - அறிந்த விஷயத்தை மட்டுமே கொண்டு, "ஒருவருக்கு ஒருவர் உணர்த்தலாம்" என்பதற்கு ஏற்பச் செய்யலாம் என்றால், என்னைப் போன்று அவன் விஷயத்தில் நீங்கள் ஒத்துப் போகவில்லை அல்லவோ? அல்லது எனது தோழிமார்கள் போன்று அல்லவே நீங்கள்! (என் சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்) – இதுவரை "அன்னைமீர்" என்பதற்கு "வயதானவர்கள்" என்று பொருள் கொண்டு கூறினார்; இனி, "நியமிப்பவர்கள்" என்று பொருள் கொண்டு, "எனக்கோடுகிற" என்று தொடங்கி உள்ள இரண்டு வாக்கியங்களில் பொருள் தருகிறார்; என்னுடைய மனதில் உள்ள சோகத்திற்கும் களைப்பிற்கும் சொற்கள் இல்லை; எனது நிலையைக் குறித்து அறியாத நீங்கள், முன்பு நடந்தவற்றையே மீண்டும் கொண்டாடியபடி உள்ளீர்கள். என்னை இந்த விஷயத்திலிருந்து விலக்குவதற்கு, தொடர்ந்தபடி வந்து செய்வதோ வேண்டுவது? இதனைக் கேட்ட தாய்மார்கள், "எங்களுக்குக் காண்பதற்குக் கண்ணும், கேட்பதற்குக் காதுகளும் இல்லையென்றால், நீதான் செய்ய முயல்வது என்ன?", என்றனர். இதற்கு இவள், "நன்மை கூறி மீட்க நினைப்பவர்கள் யாரும் இல்லாத ஊருக்குச் சென்று புகுவதற்குப் பார்க்கிறேன்", என்றாள். அவன் வரமாட்டானோ

என்றால், சாந்தோக்யத்தில் (8-12-3) – நோபஜநம் சரீரம் - முக்தன் இந்தச் சரீரத்தை நினைப்பதில்லை - என்பதற்கு ஏற்ப, பிரிந்தவர்களை மீண்டும் நினைக்க இயலாதபடி உள்ள இடம் அல்லவோ?

வ்யாக்யானம் - (வெள்ளச்சுசுமவன்) ஸுக வெள்ளத்தையுடையவன். விச்லேஷ தசையிலும் ஸம்ச்லேஷ ஐநிதமான நிரதிசய ஸுகம் மாறாதவன். பிரிவிலும் அரையாறுபடாதபடிகாணும் கலவியில் அவன் தேக்கின ஸுகாதிசயமிருந்தபடி. “வெள்ளை” என்று பாடமானபோது மறுவற்ற ஸுகமென்கை. து:காமிச்ர ஸுகமென்றபடி. “அவன் வீற்றிருந்த தென்திருப்பேரெயில்” என்று அந்வயம். இட்டகாலிட்டகையளா யிருக்கிற இருப்புக்கு எதிர்த்தட்டாயிருக்கிற இருப்பிறே அது. இத்தலையைத் துடிக்கவிட்டுத் தன் ஐச்வர்யந் தோற்ற ஸுகோத்தரமாக இருக்கிறபடி. (அவன் வீற்றிருந்த) இத்தலையைத் தோற்பித்த தன் வெற்றியெல்லாம் அவ்விருப்பிலே தோற்றும்படியிருந்த. அவன் மெய்மறந்து அப்படியிருந்தால் நாமும் மெய்மறந்திருக்கவோ? பரிபூர்ணனாய் அவன் செருக்காலேயிருந்தால், குறைவாளராய் நோவுபடுகிற நாமும் இருக்கவோ? அவன் முறை தப்ப நின்றால் நாமும் முறை தப்புமித்தனையன்றோ? பிரிந்தால் முறை பார்த்திருக்கலாம் விஷயத்துடனே கலந்தோமாகிலன்றோ நாம் ஆறியிருக்கலாவது? முறையை யழித்தாகிலும் மடலையெடுத்துக் கொண்டு போமித்தனையன்றே? “நமக்கே நலமாதலின்” என்னக்கடவதிறே.

விளக்கம் – (வெள்ளச்சுசுமவன்) - இன்ப வெள்ளத்தை உடையவன். பிரிவு நிலை மற்றும் கலந்திருக்கும் நிலை ஆகிய இரண்டிலுமே உண்டாகக்கூடிய எல்லையற்ற ஸுகம் கொண்டவன். பிரிவில் துன்பம் அடையாதபடி, சேர்க்கையில் அவன் தேக்கி வைத்துத் தந்த பேரின்பம் உள்ளது. “வெள்ள” என்பதை “வெள்ளை” என்று கொண்டால், மறுவற்ற ஸுகம். (அவன் வீற்றிருந்த) – இதனை “அவன் வீற்றிருந்த தென் திருப்பேரெயில்” என்று படிக்கவேண்டும். இவள் “இட்ட கால் இட்ட கை” என்று கிடந்தபோது, அத்தகைய நிலைக்கு எதிர்த்தட்டாக உள்ள இருப்பு. இவளை இங்கு துடிக்கும்படிச் செய்து தனது ஐச்வர்யம் வெளிப்படும்படியாக மேலான இன்பத்துடன் இருத்தல். (அவன் வீற்றிருந்த) – “வீற்றிருந்த” என்பதற்கு, “அரசனாக இருந்து” என்பதாக வேறு ஒரு பொருளும் கூறுகிறார்; அதாவது, இவளை வென்ற தனது வெற்றி முழுவதும் வெளிப்பட்டபடியாக அந்த இருப்பு உள்ளது. இதனைக் கேட்ட தாய்மார்கள், “அவன் இவ்விதம் உள்ளபோது நீ அவனை ஒதுக்காமல், ‘சென்று சேர்வேன்’ என்று கூறுவது ஏன்?”, என்றார்கள்; இதற்கு விடை தருகிறாள். அவன் நம்முடைய மேன்மையை மறந்து, நம் மீது விருப்பம் இருந்தால், நாமும்

அவன் மேன்மையை மறந்து இருக்கவேண்டுமோ? இவ்விதம் இவள் கூறக் காரணம் என்ன? அவன் பரிபூர்ணனாக உள்ளான்; இந்தச் செருக்கு காரணமாக இவ்விதம் உள்ளான்; ஆனால் நாமோ குறைகளுடன் இருந்து வருந்துகிறோம். இப்படி உள்ளபோது நாமும் அப்படி இருக்கலாமோ? இதனைக் கேட்ட தாய்மார்கள், “அவன் வராமல் உள்ளபோது நாம் இவ்விதம் விரைவு கொள்ளலாமோ?”, என்பதற்கு இவள் விடை தருகிறாள்; அவன் முறை தப்ப நின்றால், நாமும் முறை தப்பி நிற்கலாம் அல்லவோ? இதற்குத் தாய்மார்கள், “அவன் முறை தப்பினால் நாம் நமது முறைகளைத் தப்புவது முறையோ?”, என்பதற்கு இவள் விடை தருகிறாள்; பிரிந்தால் முறை பார்த்து நிற்கலாம்; விஷயத்துடன் கலக்கும்போது அல்லவோ நாம் பொறுமையுடன் இருக்கமுடியும்? முறையை அழித்துக் கொண்டாவது மடலை எடுத்துக் கொண்டு செல்லவேண்டும் அல்லவோ? இவ்விதம் செய்தவர்கள் உள்ளனரா என்பதற்கு ப்ரமாணம் பெரியதிருமொழி (9-3-9) - நமக்கே நலமாதலின் - என்பதாகும்.

வ்யாக்யானம் - (வேதவொலியும்) அவன் நெஞ்சொழிந்து பழம்புணர்ப்புக் கேளாநின்றான் காணும், அதாவது, பண்டு தான் வென்ற வெற்றிமாலைகள் கேட்கையிறே. அதாவது, “ஜிதந்தே புண்டரீகாக்ஷ” என்கிற வெற்றி மாலைகளிறே. (விழாவொலியும்) இவளைத் தோற்பித்ததுக்கு நெய்யாடல் போற்றுகிபடி. (அறா) தீர்த்தம் ப்ரஸாதித்த பிற்றைநாளே திருமுளைச்சாத்தாநிற்குமத்தனை. ஸ்யமந்தகமணி கைப்பட்டபின்பு அக்ரூரன் அடுத்தடுத்து அச்வமேதம் பண்ணினாற்போலே, அவர்க்கும் அடுத்தடுத்து உத்ஸவமாய்ச் செல்லுகிறவித்தனை. ஸ்த்ரீரத்நமிறே இவள். இவளிருக்கிறவிடமிறே மங்களகோஷங்கள் மாறிக் கிடக்கிறது.

விளக்கம் - (வேதவொலியும்) - அவன் தனது நெஞ்சத்தை ஒழிந்தவனாக, பழைய வெற்றி மாலைகளைக் கேட்டபடி உள்ளான்; அதாவது முன்பு தான் வென்ற வெற்றி மாலைகள் குறித்து கேட்டபடி உள்ளான்; அதாவது, “ஜிதந்தே புண்டரீகாக்ஷ - தாமரை போன்ற திருக்கண்கள் கொண்ட உனக்கு வெற்றி” என்பது போன்றவை ஆகும். (விழா ஒலியும்) - இவளைத் தோற்கடித்ததற்காக நெய் இறைத்து விளையாடியபடி உள்ளான். (அறா) - விழாவானது தடை இன்றி நித்யமாக இருத்தலைக் கூறுகிறார்; தீர்த்தம் அளித்த அடுத்த நாள் அல்லவோ திருமுளைகளை எடுப்பார்கள். ஸ்யமந்தக மணி கைப்பட்ட பின்னர், அக்ரூரர்

அடுத்து அடுத்து அச்வமேதம் செய்தது போன்று, இங்கும் அடுத்து அடுத்து திருவிழாவாகவே உள்ளது; ஸ்யமந்தகம் போன்று இவள் பெண் இரத்தினம் அல்லவோ? இவள் உள்ள இடம் அல்லவோ மங்கள் ஒலிகள் மாறிக்கிடக்கின்றன?

வ்யாக்யானம் - (பிள்ளைக்குழா விளையாட்டொலியும் அறா) பருவம் நிரம்பியிருக்கச் செய்தே நிஷேதிப்பார் இருக்கிற ஊரை விட்டு பருவம் நிரம்புவதற்கு முன்னே பகவதநுபவமே யாத்ரையாய்ச் செல்லுவார் இருந்த ஊரில் போய்ப்புகுமித்தனை என்கிறாள். அவ்வூரில் பருவம் நிரம்பாத பிள்ளைகளும் அகப்பட மகரநெடுங்குழைக்காதனுடைய வடிவழகிலே தோற்று வாய்வெருவா நிற்பர்கள்; "பாலா அபிக்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கச: | ராமாபிஷ்டவ ஸம்யுக்தாச்ச க்ருரேவமித: கதா:" என்னும்படியே.

விளக்கம் – (பிள்ளைக்குழா விளையாட்டொலியும் அறா) - பகவத் அனுபவம் பெறத்தக்க பருவம் வந்தபோதிலும், இவ்விதம் விலக்கியபடி உள்ளவர்கள் இருக்கின்ற ஊரை விட்டு சென்று, பருவம் நிரம்புவதற்கு முன்னரே பகவத் அனுபவம் என்பதே தங்கள் வாழ்க்கை என்று உள்ளவர்கள் வாழ்கின்ற ஊருக்குச் சென்று சேரவேண்டும் என்கிறாள். இளமைப் பருவத்தில் பகவானை அனுபவத்தில் இருப்பார்களோ என்பதற்கு விடை தருகிறாள்; அந்த ஊரில் பருவம் நிரம்பாத சிறுபிள்ளைகளும் கூட மகரநெடுங்குழைக்காதனுடைய வடிவழகில் தோற்றவர்களாக, வாய்விட்டு புலம்பியபடி இருப்பார்கள். இவ்விதம் இருப்பதற்கு ப்ரமாணம் அயோத்யாகாண்டம் (6-16) - பாலா அபிக்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கச: | ராமாபிஷ்டவ ஸம்யுக்தாச்ச க்ருரேவமித: கதா: - அயோத்தியில் விளையாடியபடி உள்ள சிறுபிள்ளைகளும் கூட, தங்கள் வீடுகளின் வாசல்களில் கூட்டமாக நின்று இராமனைத் துதிக்கும் விஷயம் நிரம்பிய கதைகளையே பேசினர் - என்பதாகும்.

வ்யாக்யானம் – (ராமோ ராமோ ராம இதி) "சோறு சோறு சோறு" என்பாரைப்போலே. (ப்ரஜாநாமபவந்கதா:) ஜநிதர்மாக்களுக்கெல்லாம் பாசுரம் இதுவே. (ராமபூதம் ஜகதபூத்) நாடு அடங்க ராமாத்வைதமானபடி. நித்யவிபூதியிலே பரிமாறக்கடவது இங்கே பரிமாறுகைக்கு ஹேதுவென்? என்னில், (ராமே ராஜ்யம் ப்ரசாஸதி) நாடு அடங்கலும் தந்தாமுடைய கர்ம பலம் புஜிக்கப் பெற்றார்களில்லை; ராமபாக்யமே யநுபவித்துவிட்டது. (நசாக்நிஜம்பயம் கிஞ்சித்) அக்நியும் சோறு வேவிக்கவேண்டும் ஔஷ்ண்யத்துக்கு மேற்பட உடைத்தாவதில்லை. (நாப்ஸுமஜ்ஜந்தி ஜந்தவ:) கொண்டு ஆழக் கடவ ஜலந்தானே கொண்டு மிதக்கப்புக்கது ராம சரத்துக்கு அஞ்சி. பண்டே

கைகண்டிருப்பதொன்றே ஜலந்தான். வேலைவேவ வில்வளைத்தவனிறே. (திருப்பேரெயில் சேர்வன் நானே) ஐயித்தார் இருந்தவிடத்தே தோற்றர் சென்று விழும் அத்தனையிறே. தாமரைக்கண்ணன் என்னெஞ்சினுடேயிறே; ஆகையாலே "ஜிதந்தே" என்று சென்று விழுமத்தனையிறே.

விளக்கம் – (ராமோ ராமோ ராம இதி) - பாலர்கள் மட்டும் அல்லாமல் அயோத்தியில் உள்ள அனைவருமே அப்படி இருப்பார்கள் என்று கூறி ப்ரமாணம் காண்பிக்கிறார்; உத்தரகாண்டம் - ராமோ ராமோ ராம இதி – ராமா ராமா ராமா - என்பது போன்றே இருப்பார்கள்; அதாவது "சோறு சோறு சோறு" என்று உள்ளது போன்று ஆகும். (ராமபூதம் ஜகதபூத்) - நாடு முழுவதும் இராமன் ஒருவனே உள்ளான் என்பதானது - என்று கருத்து. அவன் நித்யவிபூதியில் உள்ளது போன்று இங்கு இருக்கக் காரணம் என்ன என்பதற்குக் கூறுகிறார்; (ராமே ராஜ்யம் ப்ரசாஸதி) - நாடு முழுவதும் தங்கள் தங்கள் கர்மபலன்களை அனுபவிக்கவில்லை, இராம பாக்யமே அனுபவித்தனர். அவ்விதம் அவர்கள் தங்கள் கர்மபலன்களை அனுபவிக்கவில்லையோ என்பதற்கு விடை தருகிறார்; "இல்லை" என்று கூறி, ப்ரமாணமும் காண்பிக்கிறார்; ஸங்க்ஷேப இராமாயணம் (1-92) - நசாக்நிஜம்பயம் கிஞ்சித் - அக்னியும் கூட சோற்றை வேக வைக்கத் தேவையான அளவைக் காட்டிலும் அதிகமாச் சுடாமல் இருந்தது; நாப்ஸுமஜ்ஜந்தி ஜந்தவ: - எந்தப் பொருளையும் ஆழத்தில் மூழ்கடிக்கும் நீரும் கூட, மிதக்கும்படிச் செய்தது; இவை அனைத்தும் இராமனின் பாணத்திற்கு அஞ்சியே ஆகும். ஆனால் இவ்விதம் அச்சம் கொள்ளுமோ என்றால், முதலில் கைகண்டது தண்ணீரையே ஆகும்; ஸமுத்ரத்தை எரித்ததற்கு ப்ரமாணம் திருச்சந்தவிருத்தம் (31) - வேலைவேவ வில்வளைத்தன் - என்பதாகும். ஆனால் தான் சென்று ஏன் அவனை பார்க்கவேண்டும், இவள் உள்ள இடம் தேடி அவன் வரலாம் அல்லவோ என்பதற்கு விடை தருகிறாள்; (திருப்பேரெயில் சேர்வன் நானே) - வெற்றி பெற்றவர்கள் இடம் தேடி அல்லவோ தோற்றவர்கள் செல்வர்? இப்படி இவள் தோற்றாளோ என்றால், "தாமரைக்கண்ணன் என் நெஞ்சத்தில் உள்ளான்" என்றாள் அல்லவோ? "ஜிதந்தே - உனக்கு வெற்றி" என்று கூறிச் சென்று விழுகிறாள்.

7-3-2. நானக் கருங்குழல் தோழிமீர்காள்! *
அன்னையர்காள்! அயல் சேரியீர்காள்! *
நான் இத் தனி நெஞ்சம் காக்க மாட்டேன் *
என் வசம் அன்று இது இராப் பகல் போய் **
தேன் மொய்த்த பூம்பொழில் தண் பணை சூழ் *

தென் திருப்பேரெயில் வீற்றிருந்த *
வானப்பிரான் மணிவண்ணன் கண்ணன் *
செங்கனி வாயின் திறத்ததுவே

பொருள் – நானம் என்றால் நறுமணம். பரிமளம் அடங்கிய நறுமணம் பொருந்திய கருத்த கூந்தலைக் கொண்ட தோழிகளே! அவர்களுடன் என்னுடன் எந்த வேறுபாடும் இன்றி அடக்கியபடி உள்ள தாய்மார்களே! மிகுந்த ஈடுபாடு கொண்ட நான், என்னைக் காட்டிலும் அதிகமான ஈடுபாடு கொண்டதும், சுதந்திரமானதும் ஆகிய இந்த நெஞ்சத்தை, என்னை விட்டுச் செல்லாமல் காக்கமாட்டேன்; இது எனது கட்டுப்பாட்டில் இல்லை. இந்த நெஞ்சம் செய்வது என்ன? இரவு-பகல் என்ற வேறுபாடு ஆராயாமல் என்னை விட்டு அகன்று சென்று, வண்டுகள் மொய்த்தபடி உள்ள பூம்பொழில்கள் உடையதாகவும், குளிர்ந்த நீர்நிலங்கள் சூழ்ந்ததாகவும் உள்ள தென்திருப்பேரெயில் நகரில், தனது மேன்மைகள் அனைத்தும் வெளிப்படும்படியாக வீற்றுள்ளவனும், பரமபதத்தின் மேன்மை கொண்ட பிரானும், ஒளி வீசும் மாணிக்கம் போன்ற வடிவம் கொண்டவனும் ஆகிய க்ருஷ்ணனுடைய, சிவந்த பழம் போன்றுள்ள அதரத்தின் அழகில் மயங்கி நிற்கிறது.

அவதாரிகை - தாய்மார் முகம்பார்த்துச் சொன்னாளாயிறே கீழிற்பாட்டில் நின்றது. "இவள் இவ்வளவில் மீளுமவளன்றிக்கே யிருந்தாள்" என்று தாய்மாரோடு தோழிமாரோடு அயற்சேரியுள்ளாரோடு வாசியற வந்து திரண்டு ஹிதஞ் சொல்லப் புக்கார்கள். "உங்கள் ஹித வசநங் கேளாதபடி நிரவதிகமான பரத்வ ஸௌலப்யங்களை யுடையவன் பக்கலிலே ஸக்தமாய்ப் போன என்னெஞ்சைத் தகையமாட்டுகிறிலேன்; என்னெஞ்சைக் கடல் கொண்டது காணுங்கோள்" என்கிறாள்.

விளக்கம் - தாய்மார்கள் முகம் நோக்கிக் கூறியதாக அல்லவோ கடந்த பாசுரம் நின்றது? "இவள் அந்த விஷயத்திலிருந்து மீளமாட்டாள்" என்று தாய்மார்கள், தோழிமார்கள், மற்ற ஊரில் உள்ளவர்கள் என்னும் பலரும் வந்து திரண்டு இவளுக்கு நன்மை கூற முயன்றனர். இதற்கு இவள், "உங்களுடைய நன்மையை அளிக்கவல்ல சொற்களைக் கேட்காதபடி, அளவற்ற பரத்வ ஸௌலப்யம் குணங்களைக் கொண்ட அவன் பக்கம் எனது நெஞ்சம் சென்று விட்டது. அதனை நான் தடுக்கமாட்டேன். எனது நெஞ்சத்தை கடல் கொண்டது" என்கிறாள்.

வ்யாக்யானம் – (நானக் கருங்குழல் தோழிமீர்காள்) நானம் நறுநாற்றம். அவர்களுக்கு ஒரு பழி சொல்லுமாப்போலே சொல்லுகிறாள். அவர்கள் தலையான நறுநாற்றத்துடனே வந்து நிற்கையாலே. மயிர்பட மாந்தும்படியிறே இவள்படி. உங்கள் ஸந்நிதியில்லையாகில் நான் இங்கே இரேனோ? "மை வண்ண நறுக்குஞ்சி"க்கு ஸ்மாரகமாயிரா நின்றதே இவர்கள் குழல். "ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ" என்று இவளுடைய ஸுகது:கங்களே தங்களுக்கும் ஹுகது:கமாம்படி இருக்கையிறே தோழிமாராகையாவது? இவன் மயிர்முடி பேணாதே, பரிமளங் காணில் முடியும்படியாயிருக்க, இவர்கள் குழல் பேணிப் பரிமளங் கொண்டு காரியங் கொள்ளப்போருமோ? என்னில், கலவியில் இவளோடு அவன் நெருங்க நெருங்கச் சாத்திக் கழித்தபடியே ஸர்வஸ்வதாநம் பண்ணுவது இவர்களுக்கே. அப்போது அவன் பண்ணின ப்ரஸாதாதிசயத்தாலே, அது சருகானாலும் அவர்கள் மாறாதே வைத்துக் கொண்டிருப்பர்களே! அது இவளுக்கு ஸ்மாரகமாய் நலிகிறபடி. அன்றிக்கே, இவர்கள்தான் பரிமளங் கொண்டு கார்யக்கொள்ளவும் வல்லவர்கள். அதாவது தாங்கள் தளர்த்துகாட்டில் இவள் மிகவும் தளரும் என்று ஒப்பித்துக் கொண்டிருப்பர்கள். தந்தாமுடைய பொறாமையும் பாரார்களாயிற்று, இவளை யுஜ்ஜீவிப்பிக்கைக்காக.

விளக்கம் – (நானக் கருங்குழல் தோழிமீர்காள்) - நானம் என்பது நறுமணம். நறுமணம் வீசும் கறுத்த கூந்தல் கொண்ட தோழிமார்களே! அவர்களுக்கு ஒரு பழிச்சொல்லைக் கூறுவது போன்று உரைக்கிறாள்; அதாவது அவர்கள் தலையான நறுமணம் கொண்டபடி வந்து நிற்பதைக் கூறுகிறாள்; இவர்களுடைய நறுமணத்துடன் கூடிய கறுத்த கூந்தலானது, அவனுடைய நறுமணம் பொருந்திய கறுத்த கேசத்தை இவளுக்கு ஞாபகப்படுத்துகிறது; இதனால் துன்பம் ஏற்படுகிறது. மாந்துதல் என்றால் நசித்தல் அல்லது தளர்தல். நீங்கள் இங்கு எனது அருகில் இல்லையென்றால் நான் இங்கு இருக்க மாட்டேனோ? அவர்கள் இவள் அருகில் உள்ளது என்பது இவளுக்கு எப்படிப் பாதகம் என்பதைக் கூறுகிறார்; திருநெடுந்தாண்டகம் (21) – மைவண்ண நறுங்குஞ்சி - என்பதற்கு ஏற்ப அத்தகைய சேர்க்கை இவளுக்கு ஞாபகப்படுத்துவதாக இவர்களுடைய கூந்தல் உள்ளது. கிஷ்கிந்தாகாண்டம் (5-18) - ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ - நம் இருவருக்கும் துக்கமும் ஸுகமும் ஒன்றே - என்று கூறுவதற்கு ஏற்ப இவளுடைய இன்பதுன்பங்களே தங்களுக்கும் இன்பதுன்பங்களாக இருக்கும்படி உள்ளவர்களே உண்மையான தோழிமார்கள் ஆகிறார்கள் அல்லவோ? இவள் தனது கூந்தலைச்

சரியாகப் பேணாமல், பரிமளம் கண்டவுடனேயே முடிந்த போகும்படியாக உள்ளபோது, இவர்கள் தங்களுடைய கூந்தலை நன்கு பேணியபடி, பரிமளம் கொண்டு அலங்கரிக்க முடியுமோ? இதற்குச் சமாதானம் கூறுகிறார்; இதற்கு முன்னர், அவனுடைய கேசத்தை இவர்களுடைய கூந்தல் ஒத்திருந்த காரணத்தால், நினைவுபடுத்துவதாக இருந்து துன்பம் அளிப்பதாகக் கூறினாள். இங்கு, இவர்களுடைய கூந்தலானது அவனுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளதால் இவ்விதம் துன்பம் ஏற்படுத்துவதாகக் கூறுகிறாள்; அதாவது, அவன் இவளுடன் சேர்கிறான்; அப்போது அவன் நெருங்க நெருங்க, தான் அணிந்திருந்த அனைத்தையும் கழற்றிக் களைந்து அளித்தது இந்தத் தோழிமார்களிடமே ஆகும்; அப்போது அவனுடைய க்ருபை காரணமாக, அவன் அளித்த அந்தப் பொருள்கள் சருகாக இருந்தாலும், அவற்றைத் தாங்கள் அணிந்தனர்; அத்தகைய ஞாபகம் இவளைத் துன்புறுத்துகிறது. இவள் இவ்விதம் தளர்ந்து நிற்கும்போது அவர்கள் ஒப்பனை செய்து கொள்வார்களோ என்பதற்கு விடை தருகிறார்; இவர்கள் பரிமளம் மூலம் தங்கள் செயலைச் செய்து கொள்ள வல்லவர்கள்; அதாவது, தாங்கள் தளர்வுடன் இருப்பதைக் காண்பித்துக் கொண்டால், அதனைக் கண்டு இவள் மிகவும் தளர்ந்து போவாள் என்று கருதி, தாங்கள் தங்களை நன்கு ஒப்பனை செய்து கொள்பவர்கள். தங்களுடைய பிரிவாற்றாமை என்பதான நிலையையும் மீறி, இவளைப் பிழைக்கும்படிச் செய்யவல்லவர்கள்.

வ்யாக்யானம் - அகாரவாச்யனான அவனும் ஜீவித்து, மகாரவாச்யனான இவனும் ஜீவித்து, அநாதிகாலம் போரச் செய்தேயும், உஜ்ஜீவிக்கப் பெறாதே நடுவே கிடந்து போயிற்றே. இனி, கடக க்ருத்யமிறே உஜ்ஜீவிப்பிக்கை; அப்படியே இவளை இசைவித்து உஜ்ஜீவிப்பிக்கவேணுமே. தந்தாம் க்லேசங்கள் பாரார்களிறே "சேஷிக்கதிசயம் வேணும்" என்றிருப்பார்; பெருமாளிலும் க்லேசம் விஞ்சியிருக்கச் செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக இளையபெருமான் தம்மைப் பேணிக் கொண்டு தரித்திருக்குமாப்போலே. பரமபோகிகளிறே இளையபெருமாள் தாம். (ஸௌமித்ரே பச்ய பம்பாயா:) அங்குத்தை போக்யதை நெஞ்சிலே படச்செய்தேயும், பெருமாளுக்கு அந்யபரதை விளைக்கைக்காக முகத்தை மாற வைத்துக்கொண்டு நின்றார்; "பிள்ளாய், பாராய் இது இருந்தபடி!" என்கிறார். (நானக் கருங்குழல்) ஒரு தமிழன் "நானமென்று குழலுக்கு விசேஷணமாகையாலே, நாவி போன்ற குழல்" என்றான். அத்தால் நினைக்கிறதும் பரிமளத்தை.

விளக்கம் – “இவர்களால்தான் அவள் பிழைத்துக் கொள்ளவேண்டுமோ? தானே பிழைக்க இயலாதோ?”, என்பதற்கு விடை தருகிறார்; “ஆசார்யன் இல்லையென்றால் கரையேற வழி உண்டோ?”, என்பதன் மூலம் சமாதானம் கூறுகிறார்; அகாரம் மூலம் கூறப்படும் அவனும், மகாரம் மூலம் கூறப்படும் இவனும் பல காலம் ஜீவித்தபடி உள்ளபோதிலும், கரையேற இயலாமல் ஸம்ஸாரத்தில் உழல்வதாகவே உள்ளதல்லவோ? இவ்விதம் உள்ளபோது இவளை அவனிடம் கொண்டு சேர்ப்பவர்களுடைய செயலாக அல்லவோ இவளைப் பிழைக்க வைக்கும் செயல் உள்ளது? அது போன்றே இவளையும் தங்கள் வழிக்குக் கொண்டு வந்து பிழைக்குபடிச் செய்யவேண்டும். “தங்களுடைய பிரிவாற்றாமை என்பதையும் கூடப் பொருட்படுத்தமாட்டனர்” என்பதை விளக்குகிறார்; தங்களுடைய எஜமானனுக்கு ஒரு மேன்மையை ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணுபவர்கள், தங்கள் தங்கள் துக்கத்தைப் பார்க்கமாட்டார்கள் அல்லவோ? இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறார்; இராமனைக் காப்பதற்காக லக்ஷ்மணன் தன்னைப் பேணிப் பாதுகாத்துக் கொன்டு உயிர் தாங்கினான் என்பது போன்று இங்கும் கொள்க; இதனை மேலும் விளக்குகிறார்; லக்ஷ்மணன் மிகவும் இன்பத்துடன் வாழ்ந்தான்; இதற்கு ப்ரமாணம் கிஷ்கிந்தாகாண்டம் (1-60) - ஸௌமித்ரே பச்ய பம்பாயா: - பம்பையின் இனிமை நெஞ்சத்தில் பட்டபோதிலும், இராமனுக்கு வேறு ஒன்றில் எண்ணம் மாறி ஸீதையைக் குறித்த கவலை மாறவேண்டும் என்பதற்காக, தனது முகத்தை மாற்றாமல் நின்றான்; அப்போது இராமன் கிஷ்கிந்தாகாண்டம் (1-60) - ஸௌமித்ரே பச்ய பம்பாயா: - லக்ஷ்மணா! இந்தப் பம்பையைப் பார்ப்பாயாக - என்றான். (நானக் கருங்குழல்) - ஒரு தமிழ்ப் புலவன், “நானமென்று குழலுக்கு விசேஷணமாகையாலே, நாவி போன்ற குழல்” என்றான்; இதன் மூலம் நினைக்கப்படுவதும் நறுமணமே ஆகும்.

வ்யாக்யானம் - (தோழிமீர்காள்) ப்ரியஞ் சொல்லுவாரும் ஹிதஞ்சொல்வார் கோடியிலே புகுவதே! (தோழிமீர்காள் அன்னையர்காள் அயற்சேரியீர்காள்) தான் அறிந்து தோழிமாருக்குச் சொல்லாதேவிருப்பதோர் அவஸ்த்தையையும், தோழிமாரும் தானும் அறிந்து தாய் அறியாதேவிருப்பதோர் அவஸ்த்தையும், தானும் தோழியும் தாயுமறிந்து பிறரறியாதிருப்பதோர் அவஸ்த்தையுமயாயிற்று இருப்பது; அந்நிலை குலைந்து எல்லாரையுமொக்க ஸம்போதிக்கும்படியாயிற்று ஜகத் ப்ரஸித்தமானபடி. பிறர்க்குச் சொல்ல வேண்டுவதில்லையிறே, ஆயிருக்க,

ப்ரதிகூலர்க்குங் கூட தயை பண்ணவேண்டும்படி காணும் இவளுடைய ஆர்த்தி. "மாம் ஸமாநாய து:கிதாம்" என்று, "என்னை நீ பெருமாளுடனே கூட்டவல்லையே" என்றாளிறே ராவணனை. "ததா குரு தயாம் மயி" என்றும், "வாசா தர்மமவாப்நுஹி" என்றும் ஒரு திருவடி போல்வார்க்குச் சொல்லக் கடவ வார்த்தையையிறே, பிரித்தவனைப் பார்த்துச் சொல்லிற்று.

விளக்கம் – (தோழிமீர்காள்) - எனக்கு விருப்பமானவற்றைக் கூறுபவர்களும் கூட எனக்கு "நன்மையைக் கூறுகிறோம்" என்றுள்ளவர்களுடைய கூட்டத்தில் சேர்ந்தனரே! (தோழிமீர்காள் அன்னையர்காள் அயற்சேரியீர்காள்) - பொதுவாக உலகில் தான் ஒரு விஷயத்தை அறிந்து அதனைத் தோழிமார்களுக்கும் கூட அறிவிக்காமல் உள்ள நிலை, தோழிமாரும் தானும் அறிந்து அதனைத் தாய்மாருக்கு அறிவிக்காமல் உள்ள நிலை மற்றும் தானும் தோழியும் தாய்மாரும் அறிந்து அதனை மற்றவர்களுக்குக் கூறாமல் உள்ள நிலை என மூன்று நிலைகள், அனைவரையும் இவ்விதம் ஒன்றாக அழைக்கும்படி ஆயிற்று; காரணம், எனது விஷயம் அனைவரும் அறிந்த ஒன்றாக ஆயிற்று என்பதால் ஆகும். ஆனால் அடுத்த ஊரில் உள்ளவர்களுக்கு ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை தருகிறார்; மற்றவர்களுக்குக் கூறவேண்டிய அவசியம் இல்லை அல்லவோ எனலாம்; ஆயினும், இவளுடைய விரோதிகளுக்குக் கூட இவள் விஷயத்தில் கருணை காண்பிக்கும்படியாக இவளுடைய துன்பமான நிலை உள்ளது. இவ்விதம் கூறியவர்கள் உள்ளனரோ? இதற்கு விடை தருகிறார்; ஸுந்தரகாண்டம் (21-18) - மாம் ஸமாநாய து:கிதாம் - துக்கம் அடைந்துள்ள என்னை இராமனுடன் சேர்ப்பாயாக - என்று "என்னை நீ இராமனிடம் சேர்த்து வைப்பாயாக" என இராவணனிடமே கூறும் நிலை ஸீதைக்கு வந்தது. இதன் மூலம் "பகைவர்களுக்கும் கூட அருள் செய்யவேண்டும்" என்ற நிலை வெளிப்பட்டதோ என்பதற்கு பதில் கூறுகிறார்; ஸுந்தரகாண்டத்தில் - ததா குரு தயாம் மயி - அது போன்றே எனது விஷயத்தில் அருள் செய்வாயாக - என்றும், ஸுந்தரகாண்டத்தில் - வாசா தர்மமவாப்நுஹி - வாக்கு மூலம் தர்மம் அடைவாய் - என்றும் உள்ள சொற்களானவை, அனுமன் போன்றவர்களிடம் கூறவேண்டியதாக உள்ளபோதிலும், இங்கு ஸீதை, தன்னை இராமனிடமிருந்து பிரித்தவனிடம் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (தோழிமீர்காள் இத்யாதி) எங்ஙனே நான் உகந்தது உகந்திகோள்! எங்ஙனே எனக்கு ப்ரியஹிதம் பார்த்திகோள்! எங்ஙனே யுதாஸீநைகளாயிருந்திகோள்! "எங்கள் பக்கம் குறையுண்டோ? மர்யாதை

தப்பினவாறே நாங்களும் முறை தப்பினோமித்தனை யன்றோ?" என்ன, (நான் இத்தனி நெஞ்சம் காக்கமாட்டேன்) உங்களுக்கும் ஏதேனும் இங்ஙனே இருப்பதொரு ஹேதுவுண்டோ முறை தப்புகைக்கு? (நான்) நீங்களும் ஏதேனும் நெஞ்சு இழந்திகோளோ? உங்களளவல்லவென்றபடி. (இத்தனி நெஞ்சம்) உங்களில் நான் வ்யாவ்ருத்தையானாப் போலேயாயிற்று, என்னிலும் என் நெஞ்சு வ்யாவ்ருத்தமானபடி. (தனி நெஞ்சம்) சொல்லிற்றுக் கேளாத வ்வதந்திரமான நெஞ்சம். "தத் தஸ்ய ஸத்ருசம்பவேத்" என்றிருப்பார் நெஞ்சமும் இதுக்கு ஒப்பல்ல.

விளக்கம் – (தோழிமீர்காள் இத்யாதி) - தோழிமார்கள், தாய்மார்கள் மற்றும் மற்ற ஊரில் உள்ளவர்கள் என மூவரையும் அழைப்பதன் கருத்தைக் கூறுகிறார்; தோழிகளே! நான் உகந்ததை நீங்கள் எப்படி உகந்தீர்கள்? அன்னைமார்களே! எனக்கு ப்ரியமான நன்மையை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? மற்ற ஊரில் உள்ளவர்களே! எப்படி உதாஸீனர்களாக உள்ளீர்கள்? இதனைக் கேட்ட அவர்கள், "எங்களிடம் ஏதேனும் குறை உள்ளதோ? நீ உனக்கான மரியாதைக் குலைத்த காரணத்தால்தான் நாங்களும் முறை தவற வேண்டியதாக இருந்தது", என்றனர். இதற்கு இவள் விடை தருகிறாள். (நான் இத்தனி நெஞ்சம் காக்கமாட்டேன்) - உங்களுக்கும் இப்படி முறை தவறுவதற்கு ஏதேனும் ஒரு காரணம் உள்ளதோ? (நான்) - நீங்களும் என்னைப் போன்றே உங்களுடைய நெஞ்சத்தை இழந்தீர்களா? உங்கள் அளவு அல்ல எனது நிலை. (இத்தனி நெஞ்சம்) - உங்களுடைய சிந்தனை போன்றவற்றிலிருந்து நான் வேறுபட்டவளாக உள்ளதைப் போன்று, எனது நெஞ்சமும் என்னிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. (தனி நெஞ்சம்) - யார் சொல்வதையும், நான் சொல்வது உட்பட, எதனையும் கேட்காத சுதந்திரமாக உள்ள நெஞ்சம். "இத்தனி" என்பதில் உள்ள "இ" என்ற சுட்டு எழுத்தைப் போன்று கூறுகிறார்; ஸுந்தரகாண்டம் (29-30) - தத் தஸ்ய ஸத்ருசம்பவேத் - அந்தச் செயல் அவருக்குத் தகுதியானதாகும் - என்று உறுதியுடன் உள்ள ஸீதையின் நெஞ்சமும் கூட எனது இந்த நெஞ்சத்திற்கு ஒப்பானது அல்ல.

வ்யாக்யானம் - (காக்கமாட்டேன்) "முந்துற்ற நெஞ்சேயியற்றுவா யெம்மோடு நீ கூடி" என்றிருக்கு மித்தனை யொழிய, இவளால் தடுத்து வைக்கப் போகாதே. "குரவ: கிம் கரிஷ்யந்தி" என்று ஒருவரையும் பாராதே போகாநின்றது; ஒன்று கேட்டு மீளுமளவல்ல. மீட்கலாமளவும் காற்கட்டிப் பார்த்து போகாமையாலே கைவாங்கினமை தோற்றுகிறதுகாணும் "மாட்டேன்" என்கிற வுறைப்பாலே. ஸம்ஸாரிகள் சப்தாதி விஷயங்களினின்றும் மீளமாட்டாதாப்போலேயிறே இவர்

பகவத் விஷயத்தினின்றும் மீளமாட்டாதபடி. “மாட்டேன் என்று சொல்லுமிது வார்த்தையோ? எல்லாவளவிலும் தந்தாம் நெஞ்சு தந்தாமுக்கு விதேயமாக வேண்டாவோ?” என்னில், (என் வசமன்றிது) என் செய்வோம், தாய் வேறு கன்று வேறாக்கும் விஷயமானால்? கைகேயி சொற்கேட்டு ஸ்ரீபரதாழ்வான் ராஜ்யம் பண்ணுமன்றாயிற்று இவளும் இத்தாயார் வார்த்தை கேட்டு மீளுவது. இப்போது நான் உங்கள் மகளன்றோ? என்னைப் போலுமன்றே என்னெஞ்சு. எனக்குத் தானென்றிருக்குங் நிலை குலைந்தது. தன் வழியே நானொழுகும்படியாயிற்று.

விளக்கம் – (காக்கமாட்டேன்) – பெரியதிருவந்தாதி (1) - முந்துற்ற நெஞ்சேயியற்றுவா யெம்மோடு நீ கூடி - எனக்கு முன்பாக அவனிடம் சென்ற எனது நெஞ்சமே! உனக்கு பின்பாக வரும் எனது விருப்பத்தை நிறைவேற்றுவாயாக - என்று வேண்டுவது அல்லாமல், இவளால் அதனைத் தடுக்க இயலாது. “செல்லாதே” என்று கூறுகிறாளே தவிர, அதனை ஏன் தடுக்க முயலவில்லை என்பதற்கு விடை தருகிறார்; ஸ்ரீவிபு. (5-18-22) - குரவ: கிம் கரிஷ்யந்தி - தாய்தந்தையர் என்ன செய்வார்கள் - என்பதற்கு ஏற்ப, எனது நெஞ்சமானது ஒருவரையும் குறித்து ஆராயாமல் சென்றது; எதனையும் கேட்டு மீண்டு வரும்படியாக உள்ளதாக இல்லை; அதனை மீண்டும் இங்கு வரும்படிச் செய்யலாம் என்பதற்கான பல முயற்சிகளையும் எடுத்து, அது இயலாமல் கைவிட்ட நிலை வெளிப்படுகிறது; இது “மாட்டேன்” என்ற உறுதியால் வெளிப்பட்டது. ஸம்ஸாரிகளை உலக விஷயங்களிலிருந்து மீட்க இயலாதது போன்று இவர் பகவத் விஷயத்திலிருந்து மீள இயலாதபடி உள்ளார். இதனைக் கேட்ட தாய்மார்கள், “மாட்டேன் என்று கூறலாமா? அனைத்து நிலைகளிலும் அவரவர்கள் நெஞ்சம் அவரவர்களுக்கு அடிபணிந்து நிற்க வேண்டாமா?”, என்றனர். இதற்கு விடை தருகிறாள்; (என் வசமன்றிது) - தாய்ப்பசு நிலையில் தலைமகள் மற்றும் கன்று நிலையில் அவளுடைய மனம் என்று வைத்துக் கூறுகிறாள்; தாய் வேறு மற்றும் கன்று வேறு என்றாக்கவல்ல விஷயம் என்னும்போது என்ன செய்யமுடியும்? இதற்கு ஓர் உதாரணம் கூறுகிறார்; கைகேயியின் சொற்கள் கேட்டு, அதன்படி பரதாழ்வான் அரசபதவியை ஏற்றால் அல்லவோ இவளும் தனது திருத்தாயார் சொற்கள் கேட்டு மீண்டும் வருவாள்? இப்போது நான் உங்கள் மகள் அல்லவோ? என்னைப் போன்று எனது நெஞ்சம் இருப்பதில்லை; எனக்கு மட்டுமே எனது நெஞ்சம் என்று உள்ள நிலை குலைந்தது; அது தன் வழியே செல்ல, நான் அதன் வழியே செல்லும்படி ஆயிற்று.

வ்யாக்யானம் - தந்தாமுடைய நெஞ்சு அபவ்யமானனும், பவ்யமாயிருப்பதொருபோது பார்த்து ஹிதஞ் சொல்லவேண்டாவோ? என்ன, (இராப்பகல் போய்) ஸ்ருஷ்டமான காலத்திலே இதுக்கு ஹிதம் சொல்லலாவது ஒருபோது காண்கிறிலேன். ஒருபோது பகவத் விஷயத்திலும் கைவைத்து, ஒருபோது ஸம்ஸார யாத்ரையிலும் கை வைக்குமளவல்லவிறே இவளுடைய ப்ராவண்யம். இங்கேயிருப்பது ஒரு போதுண்டாகிலிறே ஒன்று சொல்லி மீட்கலாவது? (தேன் மொய்த்த இத்யாதி) இது மீட்கலாம் விஷயத்திலேயோ அகப்பட்டது. அவ்வூரில் போக்யதையிலே படிந்தாரையும் மீட்கப்போமோ? தேன் என்று வண்டு.

விளக்கம் – இதனைக் கேட்ட தாய்மார்கள், "தங்கள் தங்கள் நெஞ்சமானது அவரவர்களுக்கு பவ்யமாக இல்லை என்றாலும், அது எந்த நேரத்தில் பவ்யமாக உள்ளதோ அப்போது நன்மை கூறவேண்டாமோ?", என்றனர்; இதற்கு விடை தருகிறாள்; (இராப்பகல் போய்) - ஸ்ருஷ்டி ஏற்பட்ட காலம் தொடங்கி இதற்கு இவ்விதம் நன்மை கூற எந்த ஒரு காலத்தையும் காண இயலவில்லை. வேறு எந்த ஒரு காலமும் நன்மை கூறுவதற்கு அமையாமல் உள்ளதன் காரணம் கூறுகிறார்; இவளுடைய ஈடுபாடு என்பது, ஒரு காலகட்டத்தில் பகவத் விஷயத்தில் நிலைத்தல் மற்றும் வேறு ஒரு காலக்கட்டதில் ஸம்ஸார விஷயத்தில் நிலைத்தல் என்பதாக இல்லையே! இவளுடைய நெஞ்சமானது ஏதோ ஒரு காலகட்டத்தில் இங்குள்ள விஷயத்தில் நின்றால் அல்லவோ அதற்கு நன்மை கூறி மீட்க இயலும்? (தேன் மொய்த்த இத்யாதி) - இந்த நெஞ்சமானது மீட்டு எடுக்கவல்ல ஒரு விஷயத்திலோ சென்று அகப்பட்டது? அந்த ஊரின் இனிமையில் படிந்து நிற்பவர்களை மீட்க இயலுமோ? தேன் என்று வண்டைக் குறிப்பதாகும்.

வ்யாக்யானம் - (பூம்பொழிலித்யாதி) பூத்த பொழிலையும் குளிர்ந்த நீர் நிலங்களையுமுடைத்தான தென் திருப்பேரையில். (வீற்றிருந்த) பரமபதத்தில் இருப்படங்கலும் தோற்றும்படியிருக்கை. அவ்விடம் போலுமன்றிறே இவ்விடம்? ஒருவர் கூறை எழுவர் உடுக்கிறவிடமிறே; அவ்விடத்தோடொக்க இவ்விடத்தையும் திருத்திக் கொண்டிருக்கிறவிடமிறே. (வானப்பிரான்) இத்தால் கண்ணழிவற்ற மேன்மையைச் சொல்லுகிறது. (தென்திருப்பேரெயில் விற்றிருந்த வானப்பிரான்) ஸ்ரீவைகுண்டத்தி லிருப்பை நமக்காக இங்கேயிருக்கிற உபகாரகன். (மணிவண்ணன்) மேன்மையில்லை யாகிலும் விடவொண்ணாத வடிவிற்

பசையிருக்கிறபடி, (கண்ணன்) அங்குள்ளார்க்குப் படிவிடும் உடம்பை இங்குள்ளார்க்கு வரையாதே கொடுத்துக் கொண்டிருக்கிறவன். (வானப்பிரானித்யாதி) மேன்மையளவிடவோ? வடிவழகளவிடவோ? (செங்கனி வாயின் திறத்ததுவே) கிண்ணகத்தில் ஒரு சுழியிலே யகப்படுவாரைப் போலே, வாய்க்கரையிலே யகப்பட்டது; ஆசைப்பட்ட விஷயத்தைக் கரைகண்டதாகிலன்றோ மீளுவது? வெந்து கனிந்த திருப்பவளத்தினிடையாட்டத்தது. இது மீள நினைக்கிலன்றோ உங்கள் வார்த்தை கேட்கைக்கு அவகாசமுள்ளது.

விளக்கம் – (பூம்பொழிலித்யாதி) - நன்கு பூத்த பொழிலையும், குளிர்ந்த நீர் நிலைகளையும் கொண்ட தென்திருப்பேரையில். (வீற்றிருந்த) - பரமபதத்தின் இருப்பு முழுவதும் வெளிப்படும்படியாக உள்ள இடம். பரமபத்தைக் காட்டிலும் இங்கு இருப்பதற்கான ஆழ்ந்த ஈடுபாட்டையும், அதன் காரணத்தையும் கூறுகிறார். பரமபதம் போன்றது அல்ல இந்த இடம்; ஒருவர் கூறை எழுவர் உடுத்திக் கொள்ளும்படியாக உள்ள இடம் அல்லவா? அங்கு போன்று இங்கும் திருத்தியபடி உள்ளான். (வானப்பிரான்) - குறைவற்ற மேன்மை கூறப்பட்டது. (தென்திருப்பேரெயில் விற்றிருந்த வானப்பிரான்) - ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள தனது இருப்பை இங்கு வந்து நமக்காக வெளிப்படுத்தியபடி உள்ள உபகாரகன். (மணிவண்ணன்) - மேன்மை இல்லை என்பதாக இருந்தாலும், விட இயலாதபடியான வடிவழகு கொண்டவன். (கண்ணன்) - அங்குள்ளவர்களுக்குத் தனது திருமேனி அழகை பிரித்துக் கொடுப்பது போன்று அல்லாமல் இங்குள்ளவர்களுக்கு முழுவதுமாக அப்படியே தருபவன். (வானப்பிரானித்யாதி) - மேன்மையை அளவிட வேண்டுமோ? வடிவழகை அளவிட வேண்டுமோ? நீர்மையை அளவிடவேண்டுமோ? (செங்கனி வாயின் திறத்ததுவே) - பெரும் ஆற்றின் வெள்ளத்தில் உள்ள ஒரு சுழியில் அகப்பட்டவர் போன்று இவனுடைய சிவந்த உதடுகளிலும் வாயிலும் அகப்பட்ட நிலை. விரும்பிய விஷயத்தின் எல்லையைக் கண்ட பின்னர் அல்லவோ அதிலிருந்து மீள இயலும்? சிவந்து கனிந்த திருப்பவளத்தின் செயல்பாடு இப்படியாக உள்ளது; இதிலிருந்து மீள எண்ணினால் அல்லவோ உங்கள் சொற்களைக் கேட்கும் நேரம் ஏற்படும்?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 22)

1-2-16. விண் கொள் அமரர்கள் * வேதனை தீர * முன்
மண் கொள் வசுதேவர் * தம் மகனாய் வந்து **
திண் கொள் அசுரரைத் * தேய வளர்கின்றான் *
கண்கள் இருந்த ஆ காணீரே * கன வளையீர் வந்து காணீரே

பொருள் – ஸ்வர்க்க லோகங்களைத் தங்களது இருப்பிடமாக உடைய இந்த்ரன் முதலான தேவர்களின் துன்பமானது தீரும்படியாக, முன்னரே பூமியை இருப்பிடமாகவுடைய ஶ்ரீவஸுதேவருடைய துன்பம் தீர்க்க, அவருடைய புத்திரனாக வந்து தோன்றி, வலிமை உடைய அஸுரர்கள் அழியும்படியாக திருவாய்ப்பாடியில் வளரும் க்ருஷ்ணனுடைய திருக்கண்களின் அழகினை காணுங்கள். பொன் வளைகளை அணிந்துள்ள பெண்களே நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - ஸமுதாயசோபையிலே அநுஸந்தித்த திருக்கண்களிலழகு பின்னாட்டுகையாலே மீண்டும் அது தன்னையே அநுபவிக்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (விண்கொளித்யாதி) அவதாரங்களுக்கு ஹேது ஸாது பரித்ராணாதிகளிறே. விண்ணைத்தங்களுக்கு வஸ்தவ்ய பூமியாகக் கொண்டிருக்கிற அமரர்களுக்கு வந்த க்லேசம் தீர்க்கும்போது அவர்களடியாக மண்கொள் வசுதேவர்க்கு வந்த க்லேசமும் தீர்க்கவேணுமென்றிறே அவர்க்கு

புத்ரனாக முற்பாடு வந்தவரித்தது. அவர்கள் தங்கள் க்லேசம் தீர்த்தாராயிருப்பதும் இவர் க்லேசம் தீர்த்தாலிறே. (திண்கொளித்யாதி) பின்பு திருவாய்ப்பாடியிலே கம்ஸாதிகள் தேய, வளர்ந்தது தன் க்லேசம் தீருகைக்காகவிறே. திண்மையாவது கம்ஸன் முதலானாருடைய ஆஸுரபாவத்தாலும், ஜந்மத்தாலும், வந்த நெஞ்சில் வலி; அதாவது மாதாவென்றும், பிதாவென்றும் ஸ்வஸாவென்றும், பந்துக்களென்றும் பாராமல் கல்லிடை மோதியும், அல்பம் க்ருபை பிறவாத கம்ஸன் முதலான அஸுரர்களை வயிற்றெரி கொளுந்தி க்ஷயிக்கும்படியாகவிறே திருவாய்ப்பாடியிலே போய் வளர்ந்தருளுகிறதும். வளர்கின்றவனுடைய கடாக்ஷந்தான் அநுகூல வர்க்கம் தழைக்கவும் ப்ரதிகூல வர்க்கம் முடியவுமாயிறே யிருப்பது. (கனவளை) ஸ்ப்ருஹாவஹமுமாய் மமதா விசிஷ்டமுமான அநந்யார்ஹ சிந்ஹம்.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - ஸமுதாய சோபையின் நடுவே அநுபவித்த திருக்கண்களினழகு பின்னாட்ட, அத்தை அநுபவிக்கிறார். அதுதன்னில் எல்லாவற்றுக்கும் பின்பநுபவித்தது திருமூக்கினழகிறே. திருமூக்குக்கும் திருக்கண்களுக்கும் ஒரு சேர்த்தியுண்டே; அத்தாலும், பாதாதிகேசமநுபவித்து வருகிற அடைவுக்குச் சேர்ந்ததாகையாலும் திருக்கண்களிலே சுழியாறுபட்டு அநுபவிக்கிறார்.

விளக்கம் – திருமுக மண்டலத்தின் மிகுதியான அழகை அனுபவிக்கத் திருக்கண்களின் அழகானது குறைவாக விளங்கியதால், அதனை அனுபவிக்கிறார். ஏன் மீண்டும் அனுபவிக்கிறார்? திருமுகமண்டலம், அதிலும் எல்லாவற்றைக் காட்டிலும் மிகுதியாக அனுபவித்தது திருமூக்கின் அழகினை அல்லவா? திருமூக்கிற்கும் திருக்கண்களுக்கும் ஒரு தொடர்பு உண்டு அல்லவோ? இதனாலும், திருவடிகள் தொடங்கி திருமுடி வரை அனுபவித்து வருகிற முறைக்கு ஏற்றதாகையாலும் திருக்கண்களிலே, நதியில் உண்டாகும் சுழி போன்று ஈடுபட்டு அனுபவிக்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (விண்கொள்) அவதார ப்ரயோஜநம் ஸாது பரித்ராணாதிகளாகையாலே ஸ்வர்க்காதி லோகங்களை இருப்பிடமாகவுடைய இந்த்ராதி தேவர்களுக்கு ஆஸுர ப்ரக்ருதிகளால் வரும் து:க்கம் போம்படியாக முன்னே பூமியை இருப்பிடமாகவுடைய ஸ்ரீவஸுதேவருக்குப் புத்ரனாய் வந்தவதரித்து, தன்னைப் பற்றச் சிறைப்பட்டிருந்த ஸ்ரீவஸுதேவர் து:க்கத்தைத் தீர்த்து, பின்னை தேவர்கள் து:க்கம் தீர்க்கைக்காக முன்னே இங்கே

வந்தவதரித்தானாய்த்து. “தந்தை காலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல்” என்னக் கடவதிறே. (திண்கொளித்யாதி) காயபலமும் மநோபலமுமுடையரான அஸுரர்களானவர்கள் க்ஷயித்துச் செல்லும்படியாகத் தான் வளரா நிற்கிறவனுடைய. இவன் கால் நெடுக நெடுக அஸுரவர்கம் க்ஷணமாய் விட்டதிறே. (கண்களித்யாதி) இப்படி அநுகூல ரக்ஷணமும் ப்ரதிகூல நிரஸநமும் பண்ணுமிடத்தில் இவர்கள் தழைக்கவும் அவர்கள் க்ஷயிக்கவும் கடாக்ஷிக்கும் திருக்கண்களினழகிருக்கிறபடியைக் காணுங்கோள்; பொன்னாலே செய்த வளையையுடைய நீங்கள் வந்து காணுங்கோள்.

விளக்கம் – (விண்கொள்) - அவதாரங்களுக்குக் காரணம் சாதுக்களை ரக்ஷிப்பதற்கே ஆகும். ஸ்வர்கத்தை தங்களுக்கு இருப்பிடமாகக் கொண்டிருக்கிற இந்திரன் உள்ளிட்ட தேவர்களுக்கு, அசுரக் கூட்டங்களால் வரும் துக்கங்களைப் போக்கடிக்க, முன்னொரு நாள், பூமியை இருப்பிடமாகவுடைய ஸ்ரீவஸுதேவருக்குப் பிள்ளையாய் வந்து அவதரித்தான். ஆனால், தேவர்களின் துக்கம் தீர்க்க அவதரித்துள்ளானா என்றால் இல்லை. தன்னைக் கைப்பற்ற, கம்ஸன் ஸ்ரீவஸுதேவரைச் சிறை வைத்ததால், பெரியதிருமொழி (8-5-1) - தந்தை காலில் விலங்கு அற வந்து தோன்றிய தோன்றல் - என்பதற்கு ஏற்ப, தனது தந்தையின் துக்கத்தைத் தீர்க்கவே அவதரித்தான். இப்படியாக ஸ்ரீவஸுதேவருடைய துக்கம் தீர தேவர்களுடைய துன்பமும் தீர்ந்தது. (திண்கொள்) - அசுர பாவத்தாலும், ஜன்மத்தாலும் ஏற்பட்ட உடல் மற்றும் மனவலிமை மிக்க, அசுரக்கூட்டங்கள். அதாவது தாய் என்றும், தந்தை என்றும், ஸ்வஸா என்றும், பந்துக்கள் என்றும் பாராது, கல்லில் மோதியும், தயையானது சிறிதும் இல்லாத கம்ஸன் முதலான அசுரக்கூட்டங்கள் துன்பப்பட்டு தேயும்விதமாக திருவாய்ப்பாடியில் சென்று கால் உயர உயர வளர்கின்றதும், இப்படி அடியார் கூட்டங்கள் தழைக்கவும் அசுரக்கூட்டங்கள் அழியவும் கடாக்ஷிக்கும் திருக்கண்களின் அழகினை வந்து காணுங்கள். விரும்பத்தக்கதும், ஸர்வேச்வரன் “என்னுடையது” என்று உரிமைக் கொண்டாடப்படுவதும், பிறருக்கு உரிமையில்லாததும் ஆகிய ஆத்ம ஸ்வரூபத்தின் அடையாளமாக உள்ள பொன்னால் ஆகிய வளைகளை அணிந்த பெண்களே, நீங்கள் வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்